Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12957) விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-07 | 24-10-2005 | திங்கட்கிழமை | ஓசை-249

# ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத்தடை

# அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுகின்றது

## நெதர்லாந்துத் தூதுவர் அதிருப்தி

(கொழும்பு)

**ஐரோப்பிய ஒன்றியம் கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி விடுதலைப்புலிகள்மீது விதித்திருக்கும் பயணத்தடையானது எதிர்பாராதது அது அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுகிறது என சிறிலங்காவுக்கான புதிய நெதர்லாந்துத் தூதுவர் வன் டிஜிக் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் இடைநிறுத்தப் பட்டாலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கிறது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் சீகுலைந்து வருவதாகப் பலரும் வருத்தம் தெரிவித்து வருகின்றனர். இனப்பிரச்சினையில் தொடர்புடைய இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்து செல்ல வேண்டும் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்ப டுவதில்அனைத்துத் தரப்பினருக்கும் பொறுப்புண்டு.

(16ஆம் பக்கம் பார்க்க)

## குப்பையில் இருந்த குண்டு வெடித்து இரண்டு பொலிசார் படுகாயம்

(வவுனியா)

வவுனியா-மன்னார் வீதி பறையனாளங்குளத்திற்கும் முருங்கனுக் குமிடையில் கட்டையடம்பனில் நேற்று முன்தினம் மாலை 6.20 மணியளவில் குப்பை மேட்டில் கிடந்த குண்டு வெடித்ததில் இரு பொலிசார் படுகாய மடைந்துள்ளனர்.

பொலிசாரால் குப்பைக்கு நெருப்பு வைத்தபோது குப்பைக்குள் இருந்த குண்டு வெடித்துள்ளது.

காயம்டைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக முருங்கன் வைத்திய சாலையில் இருந்து வவுனியா பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.இதேவேளை இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முருங்கன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கடந்த கால சிங்கள தலைமைகள் தமிழ் மக்களை ஏமாற்றியது வெளிப்படை

### "லங்கா வெப் "ஆசிரியர் அஜித்பெரகும ஜயசிங்க

(கொழும்பு)

கடந்த காலங்களில் தமிழ் மக்களை சிங் களத் தலைமைகள் ஏமாற்றியது வெளிப் படையான உண்மை. முதன்மை வேட்பாள ருக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பதன் மூலம் சர்வதேச சமூகம் இதனைத் தவறாக புரிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே தமிழ் மக்களின் வாக்குகள் எந்தப் பக்கம் என்பதை உலகநாடுகள் கூர்ந்து கவனிக்கும் என "லங்கா வெப்" என்ற இணையத் தளத்தின் ஆசிரியர் அஜித் பெரகும ஜயசிங்க தெரிவித் துள்ளார்.

இம் முறை சனாதிபதித் தேர்தலில் போட்டியி டும் வேட்பாளர் எவருமே தமிழ் மக்கள் சார்பில் போட்டியிடவில்லை. இந் நிலையில்தமிழ் மக்கள் இரு பிரதான சனாதிபதி வேட்பாளர்களில் ஒரு வருக்கு ஆதரவு, அல்லது வாக்களிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் முதலீட்டு வாய்ப்பு இல்லை; நான்கு வருடத்தில் 47 ஆயிரம் கோடி இழப்பு

(கொழும்பு)

முதலீட்டு வாய்ப்புகளுக்குத் தேவையான வசதி களைச் செய்வதற்கு முதலீட்டு சபை தவறிய மையால் 2002 ஆம் ஆண்டு முதல் 2005 செப்ரெம்பர் மாதம் இறுதிவரை 378 ஒப்பந் தங்களில் கையெழுத்திடமுடியாமல் போனதா கவும் இதன் காரணமாக இலங்கைக்கு 47.ஆயிரத்து 251 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் 44 ஆயிரத்து 566 பேருக்கான தொழில் வாய்ப்புகளும் இல்லாமல் போயுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது. முதலீட்டு நிறுவனமானது முதலீடுகளைக் கவரும் ஒரு முகவர் நிலையமாக மாத்திரமே செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அது முதலீடுகளை மேற் கொள்வோருக்கான அடிப்படை வசதிகளான காணிச் சூழல், தொலைத்தொடர்பு மின்சாரம் போன்றவற்றைச் செய்துகொடுப்பதில் இருந்து விலகி நின்றமையே குறித்த முதலீட்டு ஒப்பந் தங்கள் செய்யமுடியாமல் போனமைக்கான காரணமாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் உட்பட நால்வர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சாஹிரா வித்தியாலய ஆழிப்பேரலை இடைத் தரிப்பு முகாமில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பா யொருவர் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். காயமடைந்த ஏனைய மூவரும் முகாமில் வசிக்கும் பிரபாகரன் இனிதா (வயது-7), மற்றும் தவராசா பதிகரன் (வயது-4) தவராசா தர்சிகா(வயது-8) எனத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்த சிப்பாய் உட்பட நான்கு இராணுவச் சிப்பாய்களும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், வழமையான பாதுகாப்புக் கடமையில் இருந்த சமயம் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

(16ஆம்பக்கம் பார்க்க)

## சந்திரிகா-ரணில் இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் நடைமுறைகுறித்தும் தான் வெற்றி பெற்ற பின்னர் சிறிலங்கா சுதந்தி ரக்கட்சியுடன் மேற்கொள்ளவுள்ள பேச்சுக்கள் குறித்தும் இச்சந்திப் பின்போது கலந்துரையாடப்படவுள் ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள்

(16 ஆம் பக்கம் பர்க்க)

## சமையல் எரிவாயு விலை விரைவில் அதிகரிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் சமையல் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. முன்னொருபோதும் இல்லாத வகையில் உலக சந்தையில் எரிவாயு விலை வேகமாக அதிகரித்துள்ளதாக இலங்கையின் எரிவாயு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

வீட்டுப்பாவனைக்கான எரிவாயு கொள்கலன்களின் விலைகள் 150 ரூபாவினால் அதிகரிக்கப்படலாமென தகவல்கள் தெரிவிக்கின்றன.கடந்த மாதம் எரிவாயு மெற்றிக் தொன் ஒன்றின் விலை 435 அமெரிக்க டொலராக இருந்தது எனினும் தற்பொழுது அதன் விலை 520 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கைக்குண்டு வீச்சு; பொதுமக்கள் இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எல்லை வீதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. உந்துருளியில் வந்த இனந்தெரியாத இரு நபர்களே இத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத் தாக்குதலின்போது இரண்டு பொதுமக்கள் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சி. இராசலிங்கம் (வயது 55), நிறஞ்சன் தினேஸ்குமார் (வயது 16) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

## சீரற்ற காலநிலை சிலநாட்கள் நீடிக்கும்

இலங்கையில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய கால நிலை காரண மாக களுத்துறை மாவட் டத்தின் வீதிகளும் தாழ்நிலப் பிரதேசங் களும் நீரில் மூழ்கியுள்ளன. தற் போது நிலவும் சீரற்ற காலநிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

பாலந்தநுவர,வலல்லாவிட்ட,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தேசிய எழுச்சி நாள் குறித்து கண்காணிப்புக்குழு-பா.உ கள் சந்திப்பு

வவுனியா நகர சபை மைதானத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை நடை பெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் தொடர்பாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள இச்சந்திப்பின்போது தமிழ்தேசிய எழுச்சி நாள், வவுனியாவில் ஆயுதக் குழுக்களின் நட வடிக்கைகள் என்பன தொடர்பாக விளக்கிக் கூறப்படவுள்ளதாக அவர் மேலும தெரிவித்துள்ளார்.

(10)

# சாவு அறிவித்தல்

அமரர்

## சிங்கராசா மேரிஸ்ரெலா (மல்லிகா)

யாழ்.கொழும்புத்துறையைப்பிறப்பிடமாகவும் முல்லை உண்ணாப்பிலவை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா மேரிஸ்ரெலா (மல்லிகா) 23.10.2005 காலமானார். அன்னார் பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிங்கராசாவின் அன்பு மனைவியும், ஜெயராஜ், ஜெனட் அசிஆகியோரின் அன்புத்தாயும், காலம் சென்ற சவரிமுத்து ஜேம்ஸ், மகேஸ்வரியின் அன்பு மகளும், காலம் சென்ற ஜேம்ஸ் மரியதாசின் சகோதரியும் காலம் சென்ற இராசதுரை முருகானந்தனின் மைத்துனியும் ஆவார். அன்னார் இளந்திரேசா, யோகேஸ்ரி, இராஜேஸ்வரி, மரிய இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், இராசையா விஜய குமார், இராமச்சந்திரன், விஜயராணி, கமலாம்பிகை , இராசரத்தினம், மாசில்லாமணி, குணம் (பூநகரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.10.2005 திங்கட்கிழமை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 02 மணிக்கு உண்ணாப்பிலவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
ஜெயராஜ்
(மகன்)

(6631)

# துயர் பகிர்கின்றோம்

அமரர்

## திரு.க. வினோத்ராம்

திரு கந்தசாமி அவர்களின் அன்புப் புதல் வன் வினோத்ராம் அவர்கள் அகாலச் சாவடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

பணிப்பாளர்,உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், கே.பி.கே. நிர்மாணதாரர்,
இரத்தினபுரம் கிளிநொச்சி

(6877)

# துயர் பகிர்கின்றோம்



முன்னைநாள் முல்லைத்தீவு பிரபல வர்த்தகர்

அமரர்

## திரு. செல்லையா கந்தசாமி

அவர்களின் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்

திரு. திருமதி உதயகுமார் (குடும்பம்)
அறிவு வைரவர் பல்பொருள் வாணிபம்,
முல்லைத்தீவு.

(6630)

### வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள்ஆரம்பம்**
**MS.Word,**
**MS-Excel, MS-Access,**
**MS-Powerpoint, Windows.**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணணி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள (2 மாத பாவனையில்) யூடி ஜெனரேற்றர் 5 K.Vயும் உழவு இயந்திரம் பெட்டியுடன் 25 சிறி (இங்கிலண்ட்) விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு திருநகர் பிரதான வீதி, இல 76, பிள்ளையார் வார்ப்புத் தொழிலகம், கிளிநொச்சி. (T.P.0776550962) (6872)

### தவறிவிட்டது

பாஸ்கர மூர்த்தி சின்னம்மா என்பவருடைய தே. அ. அட்டை, தற்காலிக பயண அனுமதி அட்டை (21.10.2005) அன்று பளை சோதனைச் சாவடிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தங்கநிலா நகைமாடம். ஈழநாதம் அருகாமை கிளிநொச்சி என்னும் முகவரிக்கு ஒடைக்கவும் தகவல்- பாஸ்கரமூர்த்தி. (6881)

### இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன்செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பெண்ஸ்) கனகபுரம் டிப்போ வீதி கிளிநொச்சி.


விசேட தீபாவளி சலுகை

V.D.O பிரதி உலவு, உடை, மற்றும் அன்பளிப்புப் பொருள்களானாலும் எந்த அளவிலதானாலும்

சுவிஸ்லாந்துக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 650/=

லண்டனுக்கான 5kg பொதி ஒன்றிற்கு 1kg க்கான கட்டணம் 500/=

ஐரோப்பா, கனடா ஆகிய நாடுகளுக்கான பொதிகளுக்கு விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993 (சி-12974)


# காணவில்லை

நாகலிங்கம் கவுஞ்சலிங்கம் (வயது - 21) என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கி 09-10-2005 அன்று பயணத்தை மேற்கொண்டவர்.



இவர் அணிந்திருந்த உடை கறுப்பு ஜீன்ஸ், வெள்ளைச் சேட். இதுவரை இவர் வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டால் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

த. பாஸ்கரன்,
புதிய தனுசியன் வெதுப்பகம்,
சுண்டிக்குளம் வீதி, தம்பிராசாபுரம்.

க. ரட்ணசிங்கம்,
லோட்டஸ் றோட்,
தாமரை வீதி, யாழ்ப்பாணம்.

(6878)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்:-12.09.1969 தாயக மண்ணில்:-24.09.2005

## லெப். கேணல் சுட்டா/பிறையாளன்

(கயன்சின்பாண்ஸ்-சில்வெஸ்டர்)
6 ஆம் வட்டாரம் ,சாம்பல்தீவு



தாய் மண் விடுதலையை
நெஞ்சினில் சுமந்து
வீரத்தோடு களம் பல கண்டு – நீ
நோய் எனும் கொடுமையில் சிக்கி
தாய் மண்ணை முத்தமிட்டு இன்றோடு
31 நாட்கள் சென்றுவிட்டன – குடும்பத்தின்
தலைவனே – உம் நினைவுகள்
எத்தனை கோடி
ஆண்டானாலும் எம்மைவிட்டகலாது –
என்றும் எம் நெஞ்சமதில் நிலைத்திருப்பாய்...
உம் நினைவுகளைச் சுமந்தபடியே...

24.10.2005 இன்று எமதுஇல்லத்தில் நடைபெறவுள்ள 31 ஆம் நாள் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைத்துப் போராளிகள்,நண்பர்கள் உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-மனைவி பூமா, மகள் விதுசனா

தற்காலிக முகவரி:- கைவேலி,புதுக்குடியிருப்பு.

(6880)


ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

தமிழரின் கல்வித்தேவைகள் பற்றிய கற்றறிவுப் பட்டறிவு

வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே

தொடர்புகளுக்கு AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka, TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# 108 பயணிகளுடன் சென்ற விமானம் மாயம் கடலில் விழுந்து நொருங்கியிருக்கலாம்?

(லாகோஸ்)

**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவின் லாகோஸ் விமான நிலையத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று அதிகாலை தலைநகர் அபுஜாவுக்குப் புறப்பட்ட விமானம் ஒன்று 108 பயணிகளுடன் காணாமல் போயுள்ளது.**

விமானம் புறப்பட்ட ஒரு சில நிமிடங்களில் அந்த விமானத்திற்கும் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் இடையே உள்ள தொடர் துண்டிக்கப்பட்டது.

இடையிடையே விமானிகளிடம் இருந்து கட்டுப்பாட்டு அறைக்கு ஆபத்துக்கால தகவல் குறிப்புகள் மட்டும் வந்தது. பின் முற்றிலுமாக தகவல் தொடர்பு நின்று விட்டது.

அந்த விமானம் தீவிர வாதிகளால் கடத்தப்பட்டதா என்ற பரபரப்பு ஏற்பட்டது.

விமானம் மாயமாவதற்கு முன் அது அட்லாண்டிக் கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்தது. அந்த விமானம் கடலில் நொருங்கி விழுந்திருக்கலாம் என்றும் சந்தேகிக் கப்படுகிறது

மீட்பு பணிக்காக உலங்கு வானூர்திகள் மற்றும் படகுகள் அந்த பகுதிக்கு அனுப்பப் பட்டுள்ளன.

## நாடகம் ஏற்படுத்திய கலவரத்தில் மூன்று பேர் பலி

(அலெக்சாண்ட்ரியா)

எகிப்து நாட்டின் அலெக்சாண்ட்ரியா நகரில் ஒரு அரங்கில் நாடகம் நடைபெற்றது. கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் வாழும் பகுதி இது. இந்த நாடகம் இஸ்லாமியர்களுக்கு எதிராக இருந்ததாகக் கூறி அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அந்த நாடக அரங்கின் மீது கல் வீசப்பட்டது. தீவைப்புச் சம்பவங்களும் நடைபெற்றன. பொலிசாருக்கும் கலவரக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இந்தக் கலவரத்தில் மூன்று பேர் பலியாகி விட்டனர். 60இற்கும் மேற்பட்டவர்கள் காய மடைந்தனர்.

## ஸ்ரேல் இராணுவம் தாக்கி இரு பலஸ்தீனர் பலி

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தில் மேற்குக்கரையில் கள்ளஆல்கரம் என்ற இடத்தில் இஸ்ரேல் இராணுவத்தினர் சென்ற வாகனம் மீது சிலர் கற்களை வீசி தாக்கினர். பதிலுக்கு இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பலஸ்தீனத்தைச்சேர்ந்த 18 வயது வாலிபர் உட்பட இரண்டு பேர் குண்டு பாய்ந்து இறந் தார்கள். பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

ஆனால் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "எங்கள் இராணுவ வாகனம் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் வாகனம் சேதமடைந்தது. இதனால் பதிலுக்கு சுட்டதில் ஒருவர் பலியானார் என்று தெரிவித்தார்.

பலஸ்தீன காசாப் பகுதியில் இருந்து இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்பட்ட பின் நடந்த இரண்டாவது இராணுவத் தாக்குதல் சம்பவம் இது வாகும். கடந்த ஒரு வாரகாலமாக மேற்குக் கரைப் பகுதியில் மோதல் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## ஈரானில் நிலநடுக்கம்

(தெக்ரான்)

ஈரான் நாட்டில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து இரண்டு முறை நில நடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள மியான்குக் மலைப் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கம் ஐந்து ரிச்டர் அளவில் பதிவானது பின் சிசி பகுதியில் 4.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் கட்டடங்கள் அதிர்ந்தன. இந்த நில நடுக் கத்தில் இரண்டு பேர் காயமடைந்ததாகத் தகவல் வெளி யாகியுள்ளது.



இந்தோனேஷிய இளைஞர் ஒருவர் தான் பிரியமாக வளர்க்கும் தேனீக்களை தன் உடம்பு முழுவதிலும் நிறுத்தியிருக்கிறார்.

## நான்கு மாதங்களுக்கு முன்னரே பின்லேடன் இறந்து விட்டார்

### பாக். பத்திரிகை பரபரப்புத் தகவல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பின்லேடன் இறந்திருக்கலாம் என்று செய்தி ஒன்று வெளியானது. ஆனால் பின்லேடன் ஆப்கானிஸ்தான் எல்லையில் பதுங்கி இருப்பதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார்.

இந்த நிலையில் பாகிஸ்தானின் முல்தான் நகரிலிருந்து வெளியிடும் ஒரு பத்திரிகை பின்லேடன் பற்றிப் புதுத் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

பின்லேடன் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பே இறந்து விட்டதாகவும், பின்லேடன் கந்தகார் அருகே உள்ள முகாமில் தங்கியிருந்த போது அவனது சிறுநீரகம் பாதிக்கப்பட்டது. மாரடைப்பும் ஏற்பட்டது. கந்தகார் அருகே உள்ள கிராமத்துக்குக் கொண்டு வரப்பட்ட பின்லேடன் இறந்து விட்டார்.

ஷாககா பகுதியில் அவனது உடல் அடக்கம் செய் யப்பட்டுள்ளது என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

## பறவைக் காய்ச்சலை ஒழிக்க 250 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(மணிலா)

வேகமாகப் பரவி வரும் பறவைக் காய்ச்சலை ஒழிக்க ரூ.250 கோடி நிதி ஒதுக்க ஆசிய வளர்ச்சி வங்கி (ஏ.பி.டிடி) திட்டமிட்டுள் ளது.

ஆசியாக் கண்டத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டில் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டது. ஏவியன் இன்புவுயென்சா என்ற வைரஸ் காரணமாகப் பரவிய இந்த நோய்க்கு இதுவரை 60 பேர் பலியாகினர். இலட்சக்கணக்கான பறவைகளும் பலியாயின. இந்த வைரஸ் தாக்குதலுக்கு ஆளான பறவைகள் நாடு விட்டு நாடு செல்லும் போது அங்கும் இந்த நோய் பரவுகிறது. எனவே உலகம் முழுவதும் பறவைக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள் ளது.




சீனாவிலும் பறவைக் காய்ச்சல் நோய் பரவி வருவதால் குளத்தில் நீந்தும் வாத்துக்களைப் பயத்துடன் பார்க்கும் பெண்.

இதை ஒழிப்பதற்கு ரூ.250 கோடி ஒதுக்க ஆசிய வளர்ச்சி வங்கி திட்டமிட்டுள்ளது. இதன் இயக்குனர்களின் ஒப்புதலுக்குப் பின் இந்த நிதி ஒதுக்கப்படவுள்ளது. கம்போடியா, லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் பறவைக்காய்ச்சல் ஒழிப்புத் திட்டம் ரூபா 130 கோடி வழங்கப்படவுள்ளது. உலக சுகாதார நிறுவனம், ஐ.நா உணவு மற்றும் வேளாண் இயக்கம் உலக விலங்கு நல இயக்கம் ஆகியவற்றுக்கு தொழில் நுட்ப உதவிகளை அளிக்க ரூ.120 கோடி வழங்கத் திட்டமிட்டுள்ளது. பறவைக்காய்ச்சலை ஒழிப்பதற்கான மருந்துகள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் பற்றி ஆராயப்படவுள்ளன.

## சதாம் மீதான வழக்கு நடவடிக்கைகள்

## வேற்று நாட்டுக்கு மாற்றப்படாது என்கிறார் -அல்ஜபாரி



(பாக்தாத்)

முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை வேறு நாட்டிற்கு மாற்றப்படும் என்ற கேள்விக்கே இடமில்லை என ஈராக் பிரதமர் இப்ராகிம் அல் ஜபாரி தெரிவித்தார்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை கடந்த 19ஆம் திகதி பாக்தாத்தில் நடைபெற்றது. அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு இந்த வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. இந் நிலையில் இவ் வழக்கை ஈராக்கில் நடத்தாமல் வெளிநாட்டில் நடத்த வேண்டும் என சில தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதை ஈராக் பிரதமர் இப்ராகிம் அல் ஜபாரீ நிராகரித்தார். கடந்த வெள்ளி இரவு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சதாம் மீதான வழக்கு முழுக்க முழுக்க ஈராக் நாட்டுடன் தொடர்புடையது. இது ஈராக்கின் எல்லைக்கு உள்ளேயே நடத்தப்பட வேண்டும். இந்த வழக்கை மற்ற நாட்டில் நடத்த வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. இப்படிப்பட்ட எண்ணம் நம் மூளையை எட்டவே கூடாது இந்த வழக்கை வேறு நாட்டில் நடத்த வேண்டும் என்று விரும்பும் சிலர் வேண்டுமென்றே இந்த வழக்கு தொடங்கியதற்கு அடுத்த நாள் சதாம் ஹுசைன் அதிபராக இருந்த போது அவருக்கு உடந்தையாக இருந்தவரின் வழக்கறிஞரைக் கடத்திக் கொலை செய்துள்ளனர். வழக்கறிஞரைக் கொலை செய்ததன் மூலம் இந்த வழக்கை வெளிநாட்டுக்கு மாற்ற முற்படுகின்றனர். இது போன்ற செயல்கள் மூலம் அவர்கள் தங்களின் குறிக்கோள்களை நிறைவேற்ற நினைக்கின்றனர். இந்த வழக்கு அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது ஆச்சரியத்தை அளிக்கிறது. இந்த வழக்கு விசாரணைக்காக நாங்கள் வெகு நாட்களாகக் காத்திருந்தோம். எதற்காக அடுத்த கட்ட விசாரணையை இவ்வளவு தாமதமாக்கியுள்ளனர் என்று புரியவில்லை எனத் தெரிவித்தார்.



"வில்மா சூறாவளி அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நெருங்கியிருக்கும் நிலையில் கடல் கொந்தளிக்கும் காட்சி

## தமிழகத்தில் தொடர் மழை

(சென்னை)

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. மாநிலம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இன்னும் இரண்டு நாட்களுக்கு பல இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உண்டு என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. சென்னையில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை கொட்டியது.



மெக்சிக்கோவில் கேன்கன் நகரத்தை சூறாவளி தாக்குவதையும், அதனை படம் பிடிக்கச் சென்ற செய்தியாளர்களின் வாகனத்தையும் படத்தில் காணலாம்.

# தமிழீழ மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாட முன்னேற்பாடுகள் தீவிரம்

(மல்லாவி)

முல்லை.மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் செயற்பாட்டுக் குழுக் கூட்டமும், செயற்பாட்டுக்குழு தெரிவுகளும் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் கடந்த வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாவீரர் பெற்றோர்களை சிறந்த முறையில் மாவீரர் நாளில் கௌரவிக்கப்படவேண்டும். அதற்கான செயற்பாட்டுக்குழு அமைக்கப் படவேண்டும் எனவும், மாவீரர் தினத்தை சிறந்தமுறையில் அனுஷ்டிக்க வேண்டும் எனவும் தனது தலைமையுரையில் செ.புனிதன் தெளிவு படுத்தினார்.

தொடர்ந்து செயற்பாட்டுக்குழு தெரிவுகளும் இடம்பெற்றன. இதில் தலைவராக துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார், செயலாளர் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி ஆகியோருடன் ஒன்பது உறுப்பினர்கள் தெரிவுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் பொது அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# தாலிக்குளம் நலன்புரி நிலைய மக்களுக்கு பாவனைக்குதவாத உணவுப்பொருட்கள் !

(வவுனியா செய்தியாளர்)

தாலிக்குளம் நலன்புரிநிலையத்திலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப்பொருட்கள் பாவனைக்குதவாத நிலையிலுள்ளதாக அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

சமூக சேவைகள் திணைக்களம் வவுனியா அரச செயலகத் தின் மூலம் வழங்கிய அரிசி, மா, பிஸ்கற் போன்ற உணவுப்பொருட்களினுள் புழு, வண்டு என்பன இருப்பதாகக் கூறிய அம்மக்கள் அவற்றை எடுத்துக் காட்டியும் உள்ளனர்.

வவுனியா அரச செயலகத்தின் பொறுப்பற்ற இச்செயலினால் இந்நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 49 குடும்பங்கள் பாதிப்பிற்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (10)

# உள்ளூராட்சி உ.ஆ.அலுவலகத்தில் தேசிய வாசிப்பு நாள் நிகழ்வு

(முல்லை)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன் தலைமையில் தேசிய வாசிப்பு நாள் நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி பரராஜசிங்கம், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் நா.விபுலாம்பிகை, உதவிக்கல்விப் பணிப்பாளர் அருணாசலம், நூலகர் வட்டம்சார்பில் ஒருவருமாக ஏற்றினார்கள். தொடர்ந்து மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் என்ற தலைப்பில் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் செ.அல்பிரட், வாசிப்புப் பழக்கமும் அதன் நன்மைகளும் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர், மற்றும் முதியோர்களும் வாசிப்புப்பழக்கம் என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணபவான், முல்லைவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் ஆகியோர் கருத்து வழங்கினார்கள்.

தொடர்ந்து பொழுது போக்கில் வாசிப்பின் பங்கு என்ற தலைப்பில் சிரேஷ்ட யாழ்.நூலக உதவி நூலகர் நா. விமலாம்பிகை கருத்துத்தெரிவிக்கையில்;

தொடர்ந்து வாசிப்பு தொடர்பாக சபையினரின் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இதில் செம்மலை, முல்லைத்தீவு, முள்ளியவளை, முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளில் உள்ள வாசகர் வட்டங்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# எமது ஒற்றுமையையும் பலத்தையும் நிரூபிக்கும் காலம் கனிந்துவிட்டது

-விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்

(நமது நிருபர்)

**புலம்பெயர் வாழ் எமது மக்களின் ஒற்றுமையையும் பலத்தையும் சர்வதேசத்திற்கு நிரூபிக்கும் காலம் கனிந்து விட்டது. உங்களது பணி, தியாகம், ஒற்றுமை என்பனவற்றை உலகம் அறிவதற்கான வாய்ப்பு உங்கள் வாயில் கதவைத்தேடி வந்துள்ளது என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் புலம்பெயர் வாழ் மக்களிற்கு வழங்கியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத் தடையை எதிர்த்து பிரசெல்ஸில் இன்று புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் பேரணி ஒன்றை நடாத்துவதற்காக ஒழுங்கமைப்புக்களை செய்துள்ளனர். இதனையொட்டி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான க.வே.பாலகுமாரன் புலம்பெயர் வாழ்மக்களுக்கு வழங்கியுள்ள செய்தியில் தெரிவித்திருப்பதாவது;

நாம் இன்று புலத்திலே களம் காண்கின்றோம்.அதற்கமைய இன்று பிரசெல்ஸில் உங்களுக்கென ஒரு பெரும் பணிகாத்திருக்கிறது. அதில் நீங்கள் சொல்லப்போகும் செய்தி ஐரோப்பிய ஒன்றியத்தினால் எங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையானது ஒட்டுமொத்த தமிழினத்தையும் சினமடைய வைத்துள்ளது என்பதனை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உணர்த்தப்போகிறது. எந்தவொரு தடையை விதிப்பதன் மூலமும் புலிகளை நசுக்கி பலமிழக்கச் செய்து பேச்சு வார்த்தை நடத்துவதென்பது முட்டாள் தனமானது என்பதையும் இது ஓர் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தப்போகின்றது என்றும் உணர்த்தப் போகின்றது.

அதுமட்டுமின்றி சிங்களப் பேரினவாதம் தனது இனவாதப் போக்கால் தமிழ் மக்களின் ஆன்மாவை தட்டியெழுப்பியுள்ளது. அது இன்று ஒன்றாக சங்கமித்து உரத்து ஒலிக்கும். அதுவே இன்று தனியாக தமிழர்களின் கையில் பறந்து கொண்டிருக்கும் தேசியக் கொடியை சர்வதேச அரங்கில் பறக்கச் செய்யப் போகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# வவுனியா தமிழ் தேசிய எழுச்சி நாள் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுப்பு

(வவுனியா செய்தியாளர்)

கடந்த யூலை 27ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டுப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நாள் செயற்பாடுகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் எழுச்சி செயலகம் ஒன்று பூங்கா வீதியிலுள்ள வவுனியா இந்து மாமன்றக் கட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் எழுச்சி நாள் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள் பாடசாலை ரீதியாக நடைபெற்று வருகின்ற அதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரியர்ப்பயிலுநர்கள், யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் ஆகியோர் வீடு வீடாகச்சென்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர். (10)

# "இனியவர்கள்" திரைப்படம் கனடாவில் வெளியீடு

கனேடிய ஈழத் தமிழர்களின் உருவாக்கத்தில் வெளிவந்துள்ள திரைப்படமான "இனியவர்கள்" கனடா ரொரன்ரோ நகரில் திரையிடப்படுகின்றது.

கனேடிய பல் கலாச்சார வானொலியான சி.எம்.ஆர் மற்றும் ரிவிஜ தமிழ் தொலைக்காட்சி ஆகியவற்றின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் தொழில்நுட்ப ரீதியிலும் காட்சியமைப்பிலும் சிறந்து விளங்குவதால் பலரையும் கவர்ந்துள்ளது.

ஈழத்திலிருந்து சிறுவயதில் புலம்பெயர்ந்த இளைஞர்களின் கூட்டு முயற்சியாக வெளிவந்துள்ள இத்திரைப்படம் நேர்த்தியான கதையம்சத்தைக் கொண்டுள்ளதாக திரைப்படத்தை பார்வையிட்டவர்களால் பாராட்டுப் பெற்றுள்ளது.

# கல்லடிக் கிராமத்தில் முன்பள்ளி திறந்து வைப்பு

(திருமலை)

றூம் ரு றீட் என்ற அமெரிக்க தன்னார்வ அமைப்பு திருகோணமலை மாவட்டம் - ஈச்சிலம்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் கல்லடிக் கிராமத்தில் 16 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணித்த முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைகப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட நிர்வாகம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இம்முன்பள்ளியில் சுமார் நூறு குழந்தைகள் கல்வி கற்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். பிரதேச உதவி அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன் நாடாவை வெட்டி முன்பள்ளியைத் திறந்து வைத்தார். முன்னதாக தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின திருமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் புதியவன் ஏற்றி வைத்தார். மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் மங்களேஷ், வனவளப் பாதுகாப்புப் பொறுப்பாளர் கரன் ஆகியோர் முன்பள்ளி வளவில் மரநடுகையைச் செய்தனர்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் விஜயகுமார், பிரதிப் பணிப்பாளர் சி.குமரகுருபரன் ஆகியோரும் பங்குபற்றினர். பின்னர் நடந்த கூட்டத்திற்கு, கழகத்தின் திட்டமிடல் அலுவலர் வே.கலைவாணன் தலைமை வகித்தார்.

## பெற்றுக்கொள்க

நட்டாங்கண்டல் வர்த்தகர் ஒருவரால் இரண்டு தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ நிர்வாக சேவை முல்லை. கிளையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராஜேந்திரம் வசிந்திரன் மட்டுவில் வடக்கு, சாந்திபுரம் சாவகச்சேரி (852722622V), ஜேசுதாசன் ஜெய்சுதன் நவாலிவீதி, ஆணைக்கோட்டை, யாழ்ப்பாணம் (811803545V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் தமிழீழ நிர்வாக சேவை முல்லை கிளைச் செயலகத்தில் உள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும். (24)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதமவிருந்தினர் வவுனியா உயர்நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன், சிறப்பு விருந்தினர் பீடாதிபதி க.பேர்ணாட், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மேலதிக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும், ஆசிரியர் பயிலுநர்களின் கரகாட்டத்தையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு – ஆறு.சுபாஸ்கரன்)

# தமிழீழ கடற்படை துணைப்படையின் 2 ஆவது அணி பயிற்சி நிறைவு நிகழ்வு

தமிழீழ கடற்படையின் லெப் கேணல் திருவடி பயிற்சிப் பாசறையின் கடற்படையின் தேசிய துணைப் படையின் இரண்டாவது அணி பயிற்சி நிறைவு விழா 19ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு பயிற்சியாளர் ஜீவராசா தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை படையக் கல்லூரிப் பொறுப்பாளர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி சூசை ஏற்றினார். லெப். கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரேற்றி மலர் மாலையினை முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி அணிவித்தார்.

தொடர்ந்து உறுதி உரை இடம் பெற்றது. தலைமையுரையினை பயிற்சி மாணவன் தயாளன் வழங்கினார். தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி சூசை வழங்கினார்.

பயிற்சியின்போது இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சிறப்புப் பரிசில்களை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் நன்றியுரையினை பயிற்சி மாணவன் சுஜிதரன் வழங்கினார். (20)

# தெல்லிப்பழை வைத்தியசாலை செல்வோர் மீது படையினர் கெடுபிடி அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்வோர் மீதான சோதனைக் கெடுபிடிகளை சிறிலங்கா படையினர் அதிகரித்துள்ளனர்.**

தெல்லிப்பழை வைத்தியசாலை முற்றுமுழுதான இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் காணப்படுவதால் அங்கு நோயாளர்கள் சுதந்திரமாகச் சென்று வருவது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதைக் காரணம் காட்டியே இவ் வைத்தியசாலைக்குச் செல்வோர் மீது அதிகளவிலான சோதனைக் கெடுபிடிகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள இந்தச் சோதனைக் கெடுபிடிகள் காரணமாக நோயாளர்கள் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்காக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தெல்லிப்பழை வைத்தியசாலை அண்மையில்தான் பல கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டாலும் அவ்வைத்தியசாலை மூலம் முழுமையான பயனை நோயாளர்கள் பெற்றுக் கொள்வதற்கு பாதுகாப்பு வலய கெடுபிடிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# மிதிவெடி அகற்றிய 450 ஏக்கர் வயல் விவசாயிகளிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட 450 ஏக்கர் வயல்நிலம் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் விவசாயிகளின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

தனங்கிளப்பு - சாவகச்சேரி வீதிக்கு மேற்காக உள்ள மேற்படி வயல்நிலத்தில் பயிர்செய்வதற்கான அனுமதியை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் படைத்தரப்பு வழங்கியிருந்தது.

எனினும் மேற்படி வயல்நிலம் மிதிவெடி அபாயம் மிக்கதாகக் காணப்பட்டதனால் அங்கு விவசாயிகள் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளாதிருந்தனர்.

இந்த நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் மூலம் மிதிவெடி அபாயத்திலிருந்து மீட்கப்பட்ட 450 ஏக்கர் வயல் நிலப்பரப்பே இவ்வாறு விவசாயிகளின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. (33)

# இராணுவ பிக்கப் மோதி மாணவன் படுகாயம்

பலாலி வீதியில் பாடசாலை முடிந்து சென்ற சிறுவன் மீது இராணுவ பிக்கப் வாகனம் மோதியதில் சிறுவன் பலத்த காயங்களுக்குள்ளாகி மயக்கம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆண்டு இரண்டில் கல்வி கற்கும் ரவீந்திரன் ரஜீவன் என்ற ஏழு வயதுச் சிறுவனே இந்த விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 16 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரின் குடும்பத்தினர் ஏற்கனவே இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து ஊரெழு என்னும் இடத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். விபத்து இடம்பெற்றதும் இப்பகுதியில் கூடிய மக்கள் ஆத்திரம் அடைந்த போதிலும் விரும்பத்தகாத நிகழ்வுகள் எவையும் இடம்பெறவில்லை.

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சென்ற வாகனமே சிறுவன் மீது மோதியுள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (41)

# சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திக்கு ஜப்பான் நிதியுதவி

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது பெரும் அழிவினைச் சந்தித்த சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சிறுவர் விடுதியொன்றை அமைத்து வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

இச்சிறுவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது. ஜப்பானிய சர்வதேச அபிவிருத்திக்கான உதவி நிறுவனமான எப்.ஐ.டீ.ஆர் இனால் இதற்காக சுமார் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடிக்கல் நாட்டு விழாவில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ்,எப்.ஐ.டி.ஆர் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கொயாமா மசாகடோ, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் தென்மராட்சி வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் எப்.ஐ.டி.ஆர் நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

இதனிடையே "நிகொட்" நிறுவனத்தின் மூலம் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, தங்குவிடுதி மற்றும் குடிநீர் வசதிகள் என்பவை 72 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் அங்கு தெரிவித்தார். அத்துடன் இவ்வேலைகளிற்கான கேள்விகள் ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (27)

# மின் விளக்குகள் இன்மையினால் இருளில் மூழ்கியுள்ள வீதிகள்

யாழ் நகரையும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள வீதிகளில் 850 வீதியோரமின் விளக்குகள் பொருத்தப்படவேண்டிய தேவையுள்ளது.

எனினும் இத்தேவைகளைக் கவனத்தில் கொண்டு வீதியோரமின் விளக்குகள் பொருத்தப்படவேண்டிய பல இடங்களில் மின்விளக்குகளைப் பொருத்த சம்பந்தப்பட்டவர்கள் திருப்திகரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதன்காரணமாக யாழ். நகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள பல வீதிகள் இரவு நேரங்களில் மக்கள் பயணிக்க முடியாதளவு இருளில் மூழ்கிக்கிடக்கின்றன.

இதனால் இப்பகுதிகளில் நிலவும் இருளைச்சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் வழிப்பறிகளிலும் வன்முறைகளிலும் ஈடுபடுவதாக பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# இனப்பிரச்சினை இறுதித் தீர்வு குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பிலான இறுதித் தீர்வு குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகலயில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ரணில் பேசிய போதே இவ்வாறு தெரிவத்தார். இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை செயற்படுத்துவதற்கு முன்னதாக மக்களின் ஒப்புதல் பெறப்படும். தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கள் நிறைவடைந்து இறுதித்தீர்வு உருவாக்கப்பட்டால் அது குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எனக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்கான வாக்குகளாகக் கருதப்படும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்றுக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ இப்போது எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பது வருத்தமடையச் செய்கிறது.

நான் நேர்மையான மனிதன் என் மது எதுவித குற்றச்சாட்டுக்களும் இல்லை..என் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளுக்குத் தயாராக உள்ளேன்.

சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக எதுவித நடவடிக்கையையும், ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்கொள்ளக்கூடாது. அப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.




**13.10.2005**
**19.10.2005**

### 13

⇨ ரஷ்யாவின் நாள் சிக்நகரில் செச்சினிய தீவிரவாதிகளுக்கும் படையினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 61 செச்சினிய தீவிரவாதிகளும் 24 படையினரும் 24 பொது மக்களும் பலியாகியுள்ளனர்.

### 14

⇨ மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எச்.5என்/ 1 பறவைக்காய்ச்சல் வைரஸ் ஐரோப்பாவில் பரவியிருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதையடுத்து ஐரோப்பிய பறவைக் காய்ச்சல் நிபுணர்களின் அவசரக் கூட்டம் இடம்பெற்றது. இதில் இந்நோய் தொடர்பான பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

### 15

⇨ பாகிஸ்தானில் புவியதிர்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்கும் பணிகளில் ஈடுபட்ட எம்.ஐ. 17 ரக உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதில் ஆறு படைவீரர்கள் பலி.

⇨ தைவான் நாட்டின் கிழக்குக் கடல் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில்ஏழு புள்ளியாகப் பதிவானது.

⇨ காஷ்மீரில் மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.4 புள்ளியாகப் பதிவானது.

### 16

⇨ ஆர்ஜென்ரீனா தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் நகரை அடுத்துள்ள மக்டாலினா சிறையில் உள்ள கைதிகளுக்கும் காவலாளிகளுக்குமிடையில் ஏற்பட்ட கலவரத்தில் 32 கைதிகள் பலி, 100 இற்கும் மேற்பட்டோர் காயம்.

⇨ இஸ்ரேலின் மேற்குக் கரைப்பகுதியில் இடம்பெற்ற இரு வேறு தாக்குதல்களில் பலஸ்தன இராணுவ உயரதிகாரி ஒருவரும் மூனறு இஸ்ரேலியர்களும் உயிரிழந்தனர்.

### 17

⇨ ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன்போது கட்டடங்கள் குலுங்கின.

⇨ ஈராக்கில் அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் 70 ஈராக்கியர்கள் பலி, பல குடியிருப்புக்கள் தரைமட்டம்.

⇨ துருக்கியின் இஸ்மிர் நகரிலும் ஏஜியான கடற்கரைப் பகுதிகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன்போது ஆறுபோ காயமடைந்தனர். நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவானது.

⇨ கிரீஸ் நாட்டுக்குச் சொந் தமான ஏகேன் தீவுகளில் பூமி அதிர்வு ஏற்பட் டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.7 ஆகப் பதிவானது.

### 18

⇨ காஷ்மீரில் தீவிரவாதிகள் வீடுபுகுந்து



நடத்திய தாக்கு தலில் மாநில கல்வியமைச்சர் ஸ்தலத்தில் பலி.

⇨ அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட் முதல் முறையாக சீனா பயணம்.

⇨ இந்தியாவின் பீகார் மாநிலத்திற்கான சட்டமன்ற தேர்தலில் முதலாம் கட்ட வாக்குப் பதிவுகள் வன்முறைகளுடன் நிறைவடைந்துள்ளது.

### 19

⇨ காஷ்மீர் மாநிலத்தில் நான்கு தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பதறியடித்துக் கொண்டு. வெட்டவெளிக்கு ஓடினர். நிலநடுக்கம் 5.2,5.3,5.4,5.8 என்ற ரிச்டர் அளவுகளில் பதிவானது.



⇨ முன்னாள் ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனின் வழக்குவிசாரணை ஆரம்பம்.



# ரணிலை ஆதரிப்பதன் மூலமே சுதந்திரக் கட்சியைக் காப்பாற்ற முடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதன் மூலமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியானது என்று தெரிந்த நிலையில் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகார மையத்தைக் கைப்பற்ற ஜே.வி.பி திட்டமிட்டு வருகிறது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்தது. சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ தனது ஆதரவாளரான மங்கள சமரவீர, சிறிபதி சூரியராச்சி மூலம் ஜே.வி.பி விரித்த வலையில் விழுந்துள்ளார். வன்முறைப்பாதை மூலம் தாங்கள் சாதிக்க நினைத்ததை இப்போது வேறு வழிகளில் சாதிக்க ஜே.வி.பி முனைகிறது. இதன் விளைவாக பண்டாரநாயக்க, திருமதி பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரால பாதுகாக்கப்பட்ட சுதந்திரக் கட்சி நீர்த்துப்போய்விடக் கூடும். சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டணி அமைத்து குற்றச்செயலை செய்து விட்டதாக ஏற்கனவே அநுரா பண்டாரநாயக்க அதிருப்தியில் உள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட காலத் தலைவர்கள் ஜே.வி.பி சுதந்திரக் கட்சி கூட்டணியால் வருத்தமடைந்துள்ளனர் சுதந்திரக் கட்சியை ஜே.வி.பியிடமிருந்து காப்பாற்ற ஒரேவழி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறவைப்பது தான் என்றார் கபீர்காசிம்

# ஒரு கோடிரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது

ஒருகோடி ரூபா பெறுமதியான நான்கு கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளை மன்னார் பொலிசார் நேற்றுமுன்தினம் காலை கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவிலிருந்து படகு மூலம் நேற்றுமுன்தினம் அதிகாலை கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பேசாலையில் இருந்து மன்னார் நோக்கி சென்ற பேருந்தை அதிகாலை 5.30 மணியளவில் சோதனைக்குட்படுத்தியபோதே இப்போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இந்தப்போதைப்பொருளை மன்னாரிலிருந்து வவுனியாவூடாக கொழும்பிற்கு கடத்த சந்தேக நபர் முயற்சித்திருக்கலாம் எனவும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (18)

# தமிழர் தாயகப் பகுதியில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

## - சோ.ச.க சனாதிபதி வேட்பாளர் விஜயடயஸ்

(கொழும்பு)

தமிழர் தாயக வடக்கு கிழக்கிலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேற வேண்டும் என்று சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான விஜயடயஸ் வலியுறுத்தியுள்ளார்.

சிறிலங்காவின் அரச தொலைக் காட்சியான ரூபவாகினியில் அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை நிறுத்துவதற்காகவும் சனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு சர்வாதிகார திட்டத்தை தோற்கடிப்பதற்காகவும், இந்த நாட்டின் தொழிலாளவர்க்கமும் ஒடுக்கப்பட்டமக்களும், அரசியல் ரீதியில் சுயாதீனமாக, சகல முதலாளித்துவ கட்சிகளில் இருந்தும் பிரிந்து ஒரு அரசியல் நிலைப்பாட்டில் நின்று கொள்ள முன்வர வேண்டும் யுத்தத்தை நிலை நிறுத்தவேண்டுமானால் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள சிறிலங்கா இராணுவத்தை உடனடியாகவும் நிபந்தனையின்றியும் திருப்பியழைக்க வேண்டும்.அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பிரதேசத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலாக சுற்றிவளைத்து அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு அந்தநிலங்களும் வீடுகளும் அதன் சட்டபூர்வ உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் யுத்தத்தை நிறுத்தவும் சர்வாதிகாரத்தை தோற்கடிக்கவும் தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளைக் காக்கவும் புதிய அரசியலமைப்பு ஒன்று வரையப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நுரைச்சோலை மின் திட்டம் சந்திரிகா -மகிந்த மீண்டும் மோதல்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் திட்டம் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா-பிரதமர் மகிந்தராஜபக்ஷ இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது.

சிலாபம் ஆயரிடம் அண்மையில் தொலைபேசியில் உரையாடிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, கிறிஸ்தவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் நுரைச்சோலை திட்டத்தைக் கைவிடுவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் சந்திரிகா குமாரதுங்க நுரைச்சோலை மின் திட்டத்தை எந்த எதிர்ப்பு ஏற்பட்டாலும் செயற்படுத்த உள்ளதாக கூறி வருகிறார். தேர்தல் கூட்டத்தில் பேசிய சந்திரிகா ஒரு சிலர் தான் நுரைச்சோலைத் திட்டத்தை எதிர்த்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னணியில்தான் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இப்படியான எதிர்ப்புக்கள் இருந்த போதும் நுரைச்சோலை திட்டம் செயற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.


03-10-2005 முதல் 01-11-2005 வரை

SALE தீபாவளி மலிவு விற்பனை SALE

நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்

SALE விசேட கழிவு SALE

உடனே விஜயஞ்செய்யுங்கள்:

லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி

(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

☎ 222 2381

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிறும், 30 ஆம்திகதி ஞாயிறும் விசேடமாக கடை திறந்திருக்கும். (சி-13090)


# விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்கள் ஆணைக்குழு அறிக்கை சந்திரிகாவிடம் சமர்ப்பிப்பு

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் 01.02.2005 இற்கும் 02.03.2005 இற்கும் இடைப்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்களின் பின்னணி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட அரச ஆணைக்குழு தனது விசாரணை பற்றிய அறிக்கையை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவிடம் கையளித்துள்ளது. விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் கௌசல்யனின் படுகொலைச் சம்பவத்தை அடுத்து இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைமையிலான இந்த ஆணைக்குழுவில் உறுப்பினராக அம்பாறை மேல் நீதி மன்ற நீதிபதி டபிள்யூ.ரி.எம்.வி வராவெள இடம்பெற்றிருந்தார். செயலாளராக அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.எம்.கலீல் பணியாற்றினார். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்த ஆணைக்குழுவின் அமர்வு நடைபெற்ற போது பொதுமக்கள் எவரும் சாட்சியமளிக்க விண்ணப்பிக்கவில்லை. இம்மாவட்டங்களின் தலைமைப் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மட்டும் விண்ணப்பித்திருந்தார்கள். அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் சனாதிபதி செயலகத்தினால் உத்தியோக பூர்வமாக அடுத்த சில தினங்களில் வெளியாகுமென எதிர் பார்க்கப்படுகின்றது.


சலுகை விலையில்

யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.

சலுகை விலையில்

கொழும்பு- சென்னை விமானக்கட்டணம

லண்டனுக்கு 1 kg மிகுந்த பார்சல் 600 ரூபா

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

MANOJ AIR TOURS PVT LTD

32 மணிக்கூட்டு வீதி

யாழ்ப்பாணம்.

0212223916

(சி.13111)



Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | solidar An INGO consortium including NPA, SAH and ASB

# கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.


ஏ.எஸ்.பீ., என்.பீ.ஏ. மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன்பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல் வைக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்டவிரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப்பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ் காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறு விலை விண்ணப்பப்படிவங்களும், ஆவணங்களும் 26.10.2005ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

Solidar/ ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A9 Road,
Paranthan.

தொலைபேசி – 021 228 5147 (சி-13103)


# சாவு அறிவித்தல்



## கந்தசாமி வினோத்ராம்

கரந்தன் நீர்வேலியை நிரந்தர முகவரியாகவும் 132/2 திருவையாறை தற்காலிகமுகவரியாகக்கொண்ட ராம் என அழைக்கப்படும் கந்தசாமி வினோத்ராம் 22.10.2005 சனிக்கிழமை அன்று அகாலச்சாவடைந்துள்ளார். அன்னார் விசுவலிங்கம் கந்தசாமி (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கரைச்சிப்பிரதேச சபை கிளிநொச்சி) கந்தசாமி பூபதி அம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர் கிளி/பாரதி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மகனும், வினோத்ராஜ் (ஆசிரியர் கிளி/பாரதிவித்தியாலயம்), வினோதா (எழுதுநர் பிரதிமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் கிளிநொச்சி), வினோஜி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராமின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 24.10.2005 இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று திருவையாறு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-

**வினோத்ராஜ்**
**சகோதரன்**

(6876)

சிறிலங்காவில் புதிய சனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்யும் தேர்தலுக்காக ஆளும்கட்சி வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் தீவிர பிரச்சாரச் சூறாவளியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளமையானது இயல்புக்கு மாறானதொரு நோக்கத்தை வெளிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. இந்த சந்திப்பு விசேடமாக மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அவரது தேர்தல் விஞ்ஞாபனத்

குழுவினரையும் உள்ளடக்கிய அணியினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களையே தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார். இந்தக் குழுவில் இருக்கும் ஒருவர் முன்னர் ஐ.தே.கட்சியிலிருந்த அஜித் நிவார்ட் கப்ரியல் ஆவார். அவர் தற்போது மகிந்தவின் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றுகின்றார்.

இந்தக் குழுவினர் விஞ்ஞாபனத்தை வரைந்து கொண்டிருந்த வேளையில் சந்திரிகாவால் நியமிக்கப்பட்டிருந்த குழு தமக்குள் சந்திப்புக்களை நடத்தியிருந்தது. ஆனால் இதில் மகிந்த பங்குபற்றவில்லை.

தில் நடைபெற்ற இந்த விஞ்ஞாபன வெளியீட்டு வைபவம், டயஸ் அழகப் பெரும என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. மகிந்தவின் ஆதரவாளர் அனைவரும் இங்கு சமுகமளித்தனர். ஆனால் மகிந்தவின் அரசியல் நீரோட்டத்தில் சமமாக மதிக்கப்படுபவரும் பிரதமர் வேட்பாளருமான அநுரா பண்டாரநாயக்க சமுகமளிக்கவில்லை. காரணம் அந்த நேரத்தில் அவர் பாராளுமன்றில் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையாகும். ஆனால் மகிந்த தனது விஞ்ஞாபனத்தை வெளியிட்டு முடித்தார்.

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது விஞ்ஞாபனத்தில் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் தனது பாரம்பரிய பூமி என்ற வரையறையின்றி வாழக்கூடிய வகையில் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதே தனது முதல் பணி என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்திருப்பது விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்துவது என்பதையே குறிப்பிடுகிறது. எனவே இனப்பிரச்சினை தொடர்பில் பிரதான பங்கு வகிக்கும் விடுதலைப்புலிகள் மகிந்தவுடன்

# சனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளும்



அதில் அவர் நிறைய வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்ற போதும் அது ரணில் விக்கிரமசிங்கவினது விஞ்ஞாபனத்தினின்றும் அதிக வேறுபட்டதாகத்

பேச்சுக்களுக்கு வரமுடியாது என்று கூறிவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கை யுத்தமாக இருக்குமோ என்ற கேள்வியும்

# நிச்சயமற்ற நிலையும்

தில் குறிப்பிட்டுள்ளதும் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான நடவடிக்கைகளும் அதுதொடர்பாக சந்திரிகா கொண்டிருக்கும் நோக்கம் என்ன என்பது பற்றி ஆராயும் ஒரு நிகழ்வாகவே இருக்கும்.

சந்திரிகா ரணிலுக்கு அழைப்பு விடுத்த வேளை அவர் கொழும்புக்கு வெளியில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். ஆயினும் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை சந்திரிகாவுக்கு அனுப்பிவிட்டார். அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் அது கிடைத்தது பற்றி அறிவித்ததுடன் சந்திப்பு ஒன்றுக்கு வருமாறு சந்திரிகா தற்போது ரணிலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.


அவர் அவ்வாறு அழைப்பு விடுக்கும் நேரத்திலேயே மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்



டுள்ளார். எவ்வாறாயினும் மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தொடர்பாகக் கூறியிருக்கும் கருத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைத் தீர்வில் கொண்டிருக்கும் கொள்கைகளிலிருந்து வேறுபடுவதாகத் தெரிகிறது. அத்துடன் அவரது கொள்கை கட்சியின் கொள்கையின்றி தனிப்பட்ட ஒன்றாகப்படுகிறது.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவுடன் செய்துகொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தப்படி தயாரிக்கப்பட்ட மகிந்தவின் விஞ்ஞாபனத்தை அவர் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் சந்திரிகாவினால் நியமிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரின் நோக்கம் பற்றியும் மகிந்த அறிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் தனது தனிப்பட்ட சட்ட வல்லுநர்களினதும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களைக் கொண்ட

எனினும் அவரது விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு முடிந்ததும் அதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனுமதிக்கு விடப்பட்டதுடன் சந்திரிகாவின் ஆசீர்வாதத்துக்கும் அனுப்பப்பட்டது. இந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படும் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் பொதுக்கட்டமைப்பு தொடர்பான கருத்துக்கள் சந்திரிகா கொண்டிருக்கும் கருத்துக்களிலிருந்து வேறுபட்டுள்ளது. அத்துடன் ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளதுபோல் மகிந்த சிந்தனை என்ற விஞ்ஞாபனம் அவரின் தனிப்பட்ட யோசனைகளின் பிரதிபலிப்பாகவே கருதப்படுகிறது. இதன்பிரதி இலண்டனிலிருந்த சந்திரிகாவுக்கும் அனுப்பப்பட்டது. இந்த விஞ்ஞாபனம் தொடர்பில் முரண்பாடு காட்டக்கூடாது எனத் தீர்மானித்த சந்திரிகா இது தொடர்பாக தம்பியான அநுராபண்டார நாயக்கவிடமும் அவரது நெருங்கிய உறுப்பினர்களிடமும் கலந்தாலோசித்தார். எனினும் அவரின் நம்பிக்கைக்குரியவர்களிடம் அவர் மகிந்தவின் விஞ்ஞாபனம் கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன்



சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சமாதான நடவடிக்கையில் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும் எடுத்துரைத்துள்ளார். எனினும் தற்போது மகிந்தவின் அதிகாரத்துக்கு மத்தியில் அவர்பால் கவரப்பட்டுள்ள கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கை காரணமாக சந்திரிகா நடைப்பிணமான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார். இதனை சாதகமாக்கிய நிலையிலேயே கடந்த செவ்வாயன்று மகிந்த தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்

தெரியவில்லை. ரணிலின் வாக்குறுதிகள் எவ்வாறிருந்த போதும் மகிந்த சற்று அதிகமான நலன்களை மக்களுக்கு அறிவித்திருக்கின்றார். ஆயினும் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் மகிந்த எட்டு சதவீத வளர்ச்சியையும் ரணில் பத்து சதவீத வளர்ச்சியையும் ஏற்படுத்தப் போவதாக தெரிவித்துள்ளனர்.

மகிந்தவின் "மகிந்தவின் சிந்தனையில்" குறிப்பிடப்படும் விடயங்களை குறிப்பாக தேசிய பிரச்சினையில் முற்றுமுழுதாக ஜே.வி.பியின் நிலைப்பாடே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அதாவது சமாதான ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது பல்வேறு வழியில் கேள்விக்குறியாகும் நிலை தோன்றியுள்ளது. அத்துடன் மகிந்தவின் அறிவிப்பு முற்று முழுதாக அதனை சங்கடநிலைக்கு கொண்டுவருவதாகப்படுகிறது.

மகிந்த தனது விஞ்ஞாபனத்தில் தான் ஆட்சிப்பீடம் ஏறியதும் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்துவதாகவும் பாராளுமன்றில் அங்கம் வகிக்காத கட்சிப் பிரதிநிதிகளுடனும்பேச்சு நடத்துவதாகவும் தெரிவித்துள்ளார். பேச்சுக்கள் மகாசங்கத்தினர், ஏனைய மதத்தலைவர்கள், பொதுசன அமைப்பு பிரதிநிதிகள், விசேடமாக வடக்கு கிழக்குப் பிரதேச தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோருடன் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார். தன்னைப் பொறுத்தவரையில் பேச்சுக்கள் பதவிக்கு வந்த மூன்றுமாதத்துக்குள் நடைபெறுமென நம்புவதாகவும் மகிந்த தனது விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய அல்லது வரமுடியாத விடயங்களை இனம் காணலாம் என்றும் அவர் தெரிவிக்கிறார். இதற்காக அவர் கடினமாக உழைக்கப் போவதாகவும் கூறுகிறார். அத்துடன் நாட்டின் இறைமை, ஐக்கியம் முரண்பட்டுள்ள இனங்களின் நிலை, சமாதானத்தின் முக்கியத்துவம் அவர்களின் விடுதலைக்கான போராட்டம் என்பன பாதுகாக்கப்படும் என்றும்

எழுகிறது. இதற்கு முன்பு நடந்த பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையிலும் இவ்வாறான ஒரு வினாவே எழுந்தது.

நிச்சயமற்ற இந்த அணுகுமுறைக்கு மாறாக சமாதான முயற்சி தளம்பல் நிலையிலிருக்கும்போது ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறை தீர்வுக்கு விடுதலைப்புலிகளை இணங்கச் செய்யலாம். ஒஸ்லோ உடன்படிக்கைப்படி புலிகள் பிரிவினையை விரும்பமாட்டார்கள். இந்த உடன்படிக்கை மூலமே பிரச்சினைக்குத் தீர்வு என்பதே தற்போதைய சமாதான முயற்சிகள் பின்னடையக் காரணமாகும். அத்துடன் இரண்டு தசாப்தங்களாக தொடரும் இனப்பிரச்சினையை ஓரிருமாதங்களில் தீர்க்க முடியாது.

ராஜபக்ஷவின் நிலை இவ்வாறிருக்க அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய சந்திரிகா நாட்டில் சமாதானத்துக்கான சூழலை உருவாக்குவதாக தெரிவித்துள்ளார். அதன் மூலம் யுத்தகாலத்தில் இங்கிருந்து வெளியேறிய வெளிநாட்டு முதலீட்டாளர்களை மேலும் கவரலாம் என்று தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தனது தீவிர பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். அவர் அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டபோது பெருந்திரளானோர் கூடினர். அதேபோன்று அநுராத

கேசர அபேவர்த்தன
டெய்லிமிரர்
தமிழில் வடிவேல்

புரத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்திலும் கட்சியின் பிரதான உறுப்பினரான சிறிசேனகூரே மற்றும் திலங்க சுமதிபால ஆகியோருக்கு ஆதரவாக பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

எவ்வாறேனும் தேர்தல் தினத்துக்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் இரு வேட்பாளர்களும் தீவிரபிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் என்ன மாதிரியான பிரச்சாரத்தை மேற்கொண்டபோதும் அடுத்த ஆறு ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பது மக்களின் தீர்ப்பாகவே இருக்கும். நாடு மீண்டும் இனப்பிரச்சினையில் மூழ்கிக் கிடக்குமா அல்லது ஏனைய அயல்நாடுகளைப்போல வீறுநடை போடுமா என்பதையும் மக்களே முடிவு செய்வர்.

# ஐக்கிய நாடுகள் தினம் 24 ஐப்பசி 2005 இல்

## ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டம் (UNDP)

UNDP

### மாறுநிலைத்திட்டம்(Transition Programme)


ஐக்கியநாட்டு மாறுநிலை திட்டமானது முழுஇலங்கையிலும் ஒரு முக்கியமான மீள்தல் வாழ்க்கைக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமாக தயாரிக்கப்பட்டது.

இத்திட்டமானது மக்கள் நல் வாழ்க்கையுடன் வாழக்கூடிய விதத்தில் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை மையமாக கொண்டு நேரடியாக பெண்களை வலுப்படுத்தி யுத்தம் காரணமாகவும் சூழல் காரணிகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்கள் வலுகுறைந்தவர்கள் ஆகிய எல்லாவகையினரையும் ஒன்றிணைக்கும் உபாயத்துடன் பிரச்சினைக்குள்ளான வடக்கு கிழக்கில் உள்ள 8மாவட்டங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட எல்லா பிரதேசங்களிலும் தெற்கில் சூழல் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட எல்லா பிரதேசங்களிற்கும் 2001ம் ஆண்டில்இருந்து மாறுநிலைத்திட்டமானது சுமார் 50000ம் மக்களுக்கு மீள் வாழ்க்கைக்கும் வலுவூட்டலுக்கும் உதவியளிக்கின்றது.

**சமூக அபிவிருத்தி.**மாறு நிலைத்திட்டம் 5பகுதிகளாக தலையீடு செய்கின்றது. சமூகத்தின் வித்தியாசமான தேவைகளையும் அவர்களின் வலுவையும் எண்ணங்களையும் அடிப்படையாக வைத்து ஒன்றிணைந்த சமமான உதவி பொதி மூலம் வழங்கப்படுகின்றது. நடுத்தர நீண்டகால நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய திட்ட நடைமுறைப்படுத்தலில் சிலவேளைகளில் நிவாரணத்தையும் உள்ளடக்குகின்றது.

**நுண்கடன்:-**கிராமப்பகுதியில் பாதிக்கபட்டவர்கள் இலகுவில் கடன் சூழலை உருவாக்கி புதிய கடன் சங்கங்களையும் கூட்டுறவு சங்கங்களையும் வியாபார சந்தைப்படுத்தல் பயிற்சிகளையும் நிறுவனங்களை பலப்படுத்தி அவற்றை கண்காணிப்பதும் இதில் அடங்கும்.

**வலுவூட்டல்:-**நிலைபேறான நிலைமையை உள்ளூர் பங்குதாரர்கள் மூலமும் சமூக மட்டத்திலும் உள்ளூர் அரசாங்கத்துடனும் உறுதிப்படுத்துதல் மாறுநிலைத்திட்டத்தின் அம்சமாகும். பல தரப்பட்ட நுட்பங்களை பயிற்சி மூலம் கிடைக்கச் செய்தல் இவை திட்டமிடல் முகாமைத்துவம் பயிற்சிகளை கண்காணித்தல் சமூக வலுவூட்டல் சமூகவட்டத்து நிறுவனத்திற்குரிய வலுப்படுத்தல் அபிவிருத்தி நுட்பங்களை பகிர்தல் கட்டட நிர்மாணங்களை தொடர்ந்து பேணிக் காத்தல் போன்றவை. உள்ளூர் நிறுவனங்களின் பங்களிப்பு சமூகமட்டத்திற்கு உயர்த்தல் தாக்கத்தை கொடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.





**கட்டுமான அபிவிருத்தி**

மாறு நிலைத்திட்டம் சமூக கட்டுமான அபிவிருத்திக்கு உதவியளிக்கின்றது. வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு கட்டுமானப்பணி உதாரணமாக நீர்ப் பாசனம், குளம், விவசாய சந்தைப்படுத்தல், பாதுகாப்பு அரண்கள், பாலங்கள், வீதிகள் திருத்தல் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட அழிவு பொருட்களை அகற்றல் இவற்றில் அடங்கும்.

**தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்**

மாறு நிலைத்திட்டத்தினால் அழிந்த கட்டுமானங்களை புனரமைக்கும் பொழுது மக்களுக்கு பணம் கிடைக்கும் வகையில் "வேலைக்கு பணம்" என்ற அடிப்படையில் வசதியளிக்கப்படுகின்றது.

**மீன்பிடி, விவசாயம், கால்நடை**

கிராமிய வறிய இலங்கை மக்களின் பரம்பரை உற்பத்தி தொழிலான விவசாய, கால்நடை, மீன்பிடி தொழில்களுக்கு திட்டத்தில் முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. சங்கங்களுக்கும் துறைசார்ந்த அரச நிறுவனங்களுக்கும் விசாலிப்புச் சேவையை திட்டமிடற் செய்யவும், உபகரண வசதிகளை கடன் அடிப்படையில் வழங்கவும் மீன்பிடி சமாசம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கு உதவவும் வழி செய்கிறது.

### திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முறை

முழுச்சமூகத்தின் மீளக்குடியமர்ந்தோர் மற்றும் உள்ளூர் வாசிகள் ஆகியோரின் தேவைகளை பகுப்பாய்வு செய்து முன்னுரிமைப்படுத்தி நடவடிக்கைகளை உபதிட்டம் தயாரித்து பங்குதாரர்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்.

மாறுநிலைத்திட்டம் கூடியளவு அரசமட்டத்தில் பங்குதாரர்களைக் கொண்டதாகவும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், உள்ளூர் அதிகார நிறுவனங்கள், அரச அதிபர், பிரதேச செயலர், கிராமசேவை உத்தியோகத்தர் போன்றவர்களுடன் திட்டத் தலையீடுகள் நடவடிக்கை சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்படும். உபதிட்டம் முன்மொழியப்பட்டு அரச அதிபரை தலைவராகவும் ஐ.நா.அ திட்டப்பிரதிநிதி, அரச சார்பற்ற ஒன்றிய பிரதிநிதி, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதி , மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர்களைக் கொண்ட மாவட்ட மீளாய்வு சபையூடாக சிபார்சுசெய்யப்படல் வேண்டும்.

திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் பகுதியில் உள்ளூர் சமூக அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பு ஆகியவற்றை ஐ.நா அபிவிருத்தி நிறுவனத்தின் வழிகாட்டலின்படி அமையவேண்டும்.

கண்காணித்தல்,மதிப்பீடு செய்தல் மூன்று கட்டங்களாக இருக்கும். நடைமுறைப்படுத்தும் பங்காளி நிறுவனம் கண்காணிப்பு அறிக்கையை சமர்ப்பிக்கும். சம்பந்தப்பட்ட உள்ளூர்திணைக்கள அதிகாரிகள் தொழில்நுட்ப வேலைத் திறன் தரத்தை உறுதி செய்வார்கள். ஐ.நா.அ கழகத்தோர் நேரடியாக கண்காணிப்புச் செய்யும் பல மாவட்டங்களில் கூட்டுறவு ஆணையாளர் கண்காணிப்பு வேலைகளில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

மாறுநிலைத்திட்டமானது பின்வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறது.

**IRRP**

இதன் முக்கிய இலக்கான சமூக அபிவிருத்தியை பல பரிமாணங்களுக்கூடாக அடைய முயற்சிக்கின்றது. அவையாவன : விவசாய அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி, கட்டுமான அபிவிருத்தி மற்றும் வீடமைப்பாகும். இதன் கீழ் பின்வரும் கிராமங்கள் அபிவிருத்திக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் நாகபடுவான், அரசர்கேணி, பேராலை, ஜெயந்திநகர், உடுப்பாற்றுகண்டல், அன்னைவேளாங்கன்னி, முல்லைத்தீவுவில் கரடிப்பிலவு, வள்ளுவர்புரம், கோட்டைகட்டி, அம்பாள்புரம், முறிப்பு என்பனவாகும்.

**4R**

மாறுநிலைத்திட்டம் மேலும் நல்வாழ்வு அபிவிருத்தித்திட்ட செயற்பாட்டாளர்கள் முக்கிய நிறுவனங்களுடன் 4R நிகழ்ச்சி திட்டத்தில் UNICEF ILO ஆகியவற்றுடன் இணைந்து இடம்பெயர்ந்தோர் நிலையான வாழ்க்கையை தொடர UNHCR உடன் பங்குதாரர்களாக இணைந்து செயற்படுகிறது.

இதன் முக்கிய இலக்குகளாவன நிறுவனகட்டமைப்பை மேம்படுத்தல், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், வருமான ஊக்குவிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தல். இந்த திட்டத்தின் கீழ் பின்வரும் கிராமங்களில் அபிவிருத்திபணிகள் மேற்கொண்டு வரப்படுகின்றன. மாசார், புலோப்பளைமேற்கு. தர்மபுரம் கிழக்கு, கௌதாரிமுனை, பரமன்கிராய், உருத்திரபுரீஸ்வரம்

**4R முன்னோடி**

இதன் முக்கிய இலக்கு கட்டுமான அபிவிருத்தியை மேற்கொள்ளல் இதன் கீழ் பின்வரும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 4ம் கட்டை, நாச்சிக்குடா


**CIDA 1&2**

இதன் முக்கிய இலக்குகளாவன உவர் நீர் தடுப்பணைகளை கட்டுவதன் மூலம் உவர் நீர் விவசாய நிலங்களுக்கு உட்புகுவதை தடுத்தல், வருமான ஊக்குவிப்பை மேற்கொள்ளல், கால்நடை வளர்ப்போருக்கு சந்தை வாய்ப்பை மேற்கொள்ளல், இதற்காக மாறு நிலை திட்டமானது குளிரூட்டப்பட்ட வாகனங்களை பால் சேகரிப்பதற்காக வழங்கி சேகரிக்கப்பட்ட பால்களை விற்பனை செய்வதற்கான இடத்தை அமைத்துக் கொடுத்தல், உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக சந்தை கட்டடத்தொகுதியை கட்டிக்கொடுத்தல், அங்கவீனர்களுக்கான சுய தொழில் வாய்ப்பை ஊக்குவித்தல், மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக குளிரூட்டப்பட்ட வசதி கொண்ட வாகனங்களை வழங்குதல், பனிக்கல் தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்தல் மற்றும் தொழில் வாய்ப்பை அபிவிருத்தி செய்வதற்காகவும் அப்பளத் தொழிற்சாலை அமைத்து அதற்கான வசதி



ஏற்படுத்திக் கொடுத்தல், இந் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கணனிகள், பல அலுவலக உபகரணங்கள் மற்றும் அவை இயங்குவதற்கான கட்டடங்கள், உந்துருளிகள் என்பனவற்றை வழங்குவதுடன் பங்காளி நிறுவனங்களை ஊக்குவித்தல்.

**QRP-**இதன் முக்கிய இலக்குகளாவன மாவட்டமட்ட பாடசாலைகள் , வீதிகளை புனரமைப்பு செய்தல், கழிவு முகாமைத்துவத்திற்கான உபகரணங்கள் கனரக வாகனங்களை வழங்குதல், இதன் கீழ் கள்ளப்பாடு உள்ளக வீதிகளை புனரமைத்தல் முள்ளியவளையில் வீதிகளை திருத்தல், பிரதேச சபைக்கு கனரக வாகனங்களை கொடுத்தல், கட்டுமானப்பணிகளுக்கு உதவியளித்தல், ஆறுமுகத்தான் குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துக் கொடுத்தல்.



**PTRP**

இதன் இலக்குகளாவன சுனாமி கழிவுகளை துப்புரவு செய்தல் சுனாமியால் பாதிக்கப்பட்ட முகாம்களுக்கு உள்ளக வீதிகளை அமைத்துக்கொடுத்தல்,வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், மீன் பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக குளிர்பதன அறை வசதிகளை செய்து கொடுத்தல், கடல் உணவு வகைகளை கொள்வனவு மையங்களை அமைத்துக் கொடுத்தல். கொள்வனவு செய்யப்பட்ட கடலுணவுவகைகளை வெளிமாவட்டங்களில் சந்தைப்படுத்த் குளிரூட்டி வாகனங்களை வழங்குதல். உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு சந்தைத் தொகுதிகளை அமைத்துக்கொடுத்தல்.(செம்மலை, சிலாவத்தை, முள்ளிவாய்க்கால்,இரணைப்பாலை,மந்துவில்.) கடலுணவு பதனிடும் தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுத்தல். தச்சுவேலை தொழிற்கூடங்களை அமைத்துக் கொடுத்தல். சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லங்கட்கு ஜீவனோபாய ஆதாரத்திட்டங்களை வழங்குதல், அரிசி ஆலைகளை அமைத்துக் கொடுத்தல், சீமெந்துக்கல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துக் கொடுத்தல்.இதன் இலக்குகளில் ஒன்றாக சுற்றுச்சூழலை பாதுகாத்தலும் அமைகிறது.



**MAP**

மாவட்ட ரீதியாக மீளெழும் சுழற்சி முறைக் கடன் திட்டங்களை வழங்குவதன் மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்தல். இளம்பராயத்தில் வேலைசெய்யும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் குழந்தைகளைப் பாதுகாத்தல்.

**ERP:-** இதன் பிரதான இலக்காக வீதிகளை புனரமைத்தல் அமைகிறது.

**BCPR:-** தூவல் முறை நீர்ப்பாசனத்தை பிரபல்யப்படுத்துதல் , மரநடுகைத் திட்டங்களை செயன்முறைப்படுத்துதல்.



## உலக தொழிலாளர் நிறுவனம்

**ILO:-** சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO)என்பது பல நாடுகளில் தொழில் மற்றும் தொழிலாளர் சம்பந்தமான தேசியக் கொள்கை வடிவமைப்புக்கு உதவி செய்கின்ற ஒரு ஐக்கிய நாடுகள் (UN) நிறுவனமாகும். இலங்கையில் இந்நிறுவனம் தேசிய ரீதியில் அரசாங்கம் , தொழிற்சங்கங்கள், தொழிலதிபர் ஒன்றியம் போன்றவையோடு ஒன்று சேர்ந்து சேவை புரிகின்றது. ILO வின் கீழுள்ள ஒரு முக்கிய திட்டமாக சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதை ஒழிக்கும் திட்டம்(IPEC) நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் பலபாகங்களிலும் இத்திட்டம் பலவிதமான பங்காளர்நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படுகின்றது.இத்திட்டத்தின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மேம்பாட்டுக்கான திட்டத்தின் கீழ்(Acton Plane for CAW)

தொழிற்பயிற்சி வழங்கப்படுகின்றது. இதுவரை வடக்கில் 600 க்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி வழங்கப்பட்டு தொழிலிலமர வழிவகை செய்யப்பட்டுள்ளது. ILO வினால் இவர்களுக்கு விரும்பிய தொழிற்பயிற்சியை பெறவும் அதன் பின் தொழிலிலீடுபட தேவையான உபகரணங்கள் பெறவும் தொடர்ந்து தொழிலில் ஈடுபடவாய்ப்பும் வழங்கப்படுகிறது.மேலும் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோரிற்கு அதற்கான ஆரம்ப வியாபாரம் பயிற்சியும் , சிறு நிதி உதவி வழங்கும் நிறுவனங்களோடு தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றது.ILO வின் இத் திட்டத்தில் பங்காளி நிறுவனங்களாக கிளிநொச்சியில் REERDO வினால் அறிவியல் நகரிலுள்ள ESDC நிலையத்திலும்,மற்றும் KILITECH,CWDR போன்றன செயற்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் தவிர போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய மக்களுக்கு (IDPs) உதவும் 4R திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களிலுள்ள சிறுவர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் கிராமிய ரீதியான தொழிற்பயிற்சியும் (CBT)உற்பத்தி நிலையங்களை உருவாக்குதலும் ILO வினால் பொருண்மிய மதியுரையகம் (TECH)அனுசரணையுடன் நிறைவேற்றப்படுகிறது

# கிளிநொச்சியில் கொண்டாடும் ஐக்கிய நாட்டு நிறுவனங்கள்

## ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் யுனிசெவ் நிறுவனமானது சிறுவர்களின் நலனுக்காக புணியாற்றும் குறிக்கோளைக் கொண்டு 1946 இல் ஸ்தாபிக்கப்பட்டது. உலகெங்கிலும் 200 இற்கும் மேற்பட்ட அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இலங்கையில் கொழும்பை தலைமைக் காரியாலயமாக கொண்டு இயங்கும் இந்நிறுவனம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, காலி ஆகிய இடங்களில் கள அலுவலகங்களையும் கொண்டுள்ளது. சிறுவர்களின் உடல்நலம், கல்வி, பாதுகாப்பு, பாதுகாப்பான குடிநீர் அத்துடன் சுகாதாரம் ஆகியவற்றை இலக்காக கொண்டு செயற்படுகின்றது.

2005ம் ஆண்டில் கிளிநொச்சி யுனிசெவ் இனால் உள்ளடக்கப்பட்ட சில செயற்பாடுகள் வருமாறு:

### கல்வி

யுனிசெவ் **"எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி"** என்பதை மையமாகக் கொண்டு உதவி புரிந்து வருகின்றது. தற்போது கிளிநொச்சி,முல்லைத்தீவு,துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் கல்விசார் செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

3500ற்கும் மேற்பட்ட மாணவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்களுக்கான தற்காலிக பாடசாலைகள் யுனிசெவ் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. இம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம், சீருடை போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன.

தண்ணீர் தாங்கி,வாளி,கூரைவிரிப்பு,கரும்பலகை தளபாடம் போன்ற பொருட்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் 44 பாடசாலைகளில் தங்கியிருந்தனர். இவற்றை தொற்று நீக்கம் செய்து, சிறிய திருத்த வேலைகளும் செய்து, வர்ணம் பூசுவதற்கும் யுனிசெவ் உதவி புரிந்தது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் மூன்று புதிய பாடசாலை நிர்மாணத்திற்கும், இரண்டு பாடசாலை புனரமைப்புக்கும் உதவுகிறது.

சுனாமியால் பாதிக்கப்படாத பிரதேசத்தில் 130 பாடசாலை தற்காலிக வகுப்பறைகளை மீள வேய்வதற்கும், 15 கட்டட திருத்த வேலைகளுக்கும், 9 புதிய வகுப்பறை கட்டிட நிர்மாணத்திற்கும் நிதியுதவியளிக்கிறது.

துரித கற்றல் செயற்பாடு மூலம் 19465 மாணவர்கள் பயனடைகிறார்கள். 350 மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியும், 10 நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட சேவை, 450 ஆசிரியர்களுக்கு பிள்ளை நேயப்பாடசாலைப் பயிற்சி வழங்கல், பிள்ளை நேயப்பாடசாலை அபிவிருத்தி போன்ற செயல் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித் திணைக்களங்களில் மேலதிக ஆளணி அத்துடன் சில அத்தியாவசிய உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

யுனிசெவ் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தொடர்ந்தும் உதவிக்கரம் நீட்டும்.



### நீரும் சுகாதாரமும்

சுனாமி அனர்த்தத்திற்கு பின்னர் வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கான குளியலறை யுனிசெவ் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.அமைத்துக் கொடுக்கப்பட்ட குளியலறைக்கான வடிகால் அமைப்பும், கழிவுநீர் தொட்டியும், தொடர்ச்சியான பராமரிப்பும் தேவையான இடங்களில் ,வழங்கப்பட்டு வருகிறது.நீர்,சுகாதார மேம்படுத்துவதற்காக இரண்டு கழிவுறிஞ்சி அகற்றும் வாகனம்,இரண்டு நீர்த்தாங்கி வாகனமும் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு,வடமராட்சி கிழக்கில் போர்அனர்த்தத்தினாலும், சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக யுனிசெவ் நிறுவனமானது 250 கிணறுகளையும்,500 மலசலகூடங்களையும் நிர்மாணிக்கவும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான 15 கிணறுகள் நிர்மாணிக்கவும், பாடசாலைகளுக்கு நீர் சுகாதாரவசதிகளை செய்யவும் உதவி புரிகிறது.கிளிநொச்சி கல்வி வலயத்தின் நீர் சுகாதாரவசதிகளை மேம்படுத்த முன்வந்துள்ளது.

சனநெருக்கடியான நிலைமைகளில் தொற்றுநோய்கள் இலகுவில் பரவி பேரழிவை மக்களில் ஏற்படுத்தலாம். இவ்வாறான நிலைமைகளில் தனிநபர் சுகாதாரம், சுற்றுப்புற சூழல் சுகாதாரம், சுத்தமான குடிநீர், ஒழுங்கான மலகூடப் பாவனை, பராமரிப்பு, குப்பைகழிவுகளை அகற்றுவது தொடர்பான விழிப்புணர்வை வழங்கி சுகாதார மேம்பாட்டுடன் ஆரோக்கியமுடைய சமூகமாக வாழ்வதற்கு.**யுனிசெவ் நிறுவனமானது சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.**

இரு மாவட்டங்களிலும் சமூகப்பங்களிப்புடன் சுகாதார மேம்பாட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பங்காளிகளாக மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் போன்றோர் இணைக்கப்பட்டுள்ளனர்.இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 132 சுகாதார ஊக்குவிப்பாளர்களும்,10 இணைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.



### சுகாதாரம்

யுனிசெவ் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதாரம் சார் செயற்பாடுகள் பெண்களையும், சிறுவர்களையும் கருத்திற் கொண்டதாகவுள்ளது.

தற்போது தருமபுரம், பூநகரி, வேரவில்,வட்டக்கச்சி,உருத்திரபுரம், பளை,அக்கராயன், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் மகப்பேற்று விடுதி நிர்மாணம்,மற்றும் புனரமைப்புக்கு துணைபுரிகிறது.

இருபது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பத்து நிர்மாண வேலைகள் முடிவுற்று, ஏனைய பத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கிளிநொச்சியில் வெளிநோயாளார் பகுதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது, முல்லைத்தீவில் மருந்துக் களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருள் விநியோகம் செய்ய பாரஊர்தி, நோயாளிகளை ஏற்றிச்செல்லும் வாகனம் என்பனவும் சுகாதார திணைக்களகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் யுனிசெவ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிர்மாணத்திற்கும், சிறந்த சேவையை செய்து வரும் தொண்டர்களுக்கான உறுதுணையை வழங்கும்.




### சிறுவர் பாதுகாப்பு

சிறுவர் பாதுகாப்பு – 2005ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து கீழ்காணும் பகுதிகளை கிளிநொச்சி யுனிசெவ் கருத்திற்கொண்டு செயற்படுகின்றது.

➤ **துணையற்ற, பிரிந்து வாழும் சிறுவர்களை இனங்காணலும் ஆவணப்படுத்தலும்.**

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டு துணையற்ற, பிரிந்து வாழும் சிறுவர்களின் எண்ணிக்கையை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து உறுதிப்படுத்தப்பட்டது. சிறுவர்களுக்கான சட்டஏற்பாடுகளையும், தொடர் சமூகசேவை வேலைகளையும் நன்னடத்தை திணைக்களத்துடன் கூட்டாக இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வறுமையான சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கான குடும்ப பொதி நன்னடத்தை உத்தியோகத்தர்களூடாக விநியோகிக்கப்பட்டது.

**உளவள செயற்பாடுகள் :-**

சுனாமிக்குப் பின்னர் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்த பிள்ளைகளையும் குடும்பங்களையும் அன்னையில்லத்துடன் நெருக்கமாக இணைத்து மன ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் நடாத்தப்பட்டன. ஒரு சில நலன்புரிநிலையங்களில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் அன்னையில்ல உளவளத்துணையாளர்கள் குடும்பங்களுடன் இருந்து மனஆற்றுப்படுத்தல் செயற்பாட்டையும் சிறுவர்கள் பெரியளவில் விளையாட்டுகளில் பங்குபற்றவும் ஊக்குவிக்கப்பட்டது.

➤இடைத்தங்கல் முகாம்களில் 'சிறுவர்நேய சூழல்' உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்துஅமைக்கப்பட்டுள்ளது, இந்நிறுவனம் சிறுவர்களுக்கான செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக சிறுவர் கழகமும் உருவாக்கியுள்ளது. முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் கல்லாறு ஆகிய இடங்களில் உள்ள அனைத்து இடைத்தங்கல் முகாம்களிலும் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு, இச்செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

➤முல்லைத்தீவு, மற்றும் கல்லாறு ஆகிய இடங்களில் உள்ள எல்லா இடைத்தங்கல் முகாம்களிலும் உழைக்கும் மகளிர்அபிவிருத்தி நிறுவனத்தினூடாக அரங்க செயற்பாட்டு குழு மனச்சோர்வு, மனவடுக்களை போக்குவதற்கான அரங்க நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

➤முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சியில் ஆவணி 26 தொடக்கம் 29 வரையான காலப்பகுதியில் நான்கு நாட்கள் கோமாளிக் கூத்து நடத்தப்பட்டதுடன் ,அரங்க செயற்பாட்டு குழுவுக்கும், இளைஞர் குழுவுக்கும் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.

➤சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு (துஷ்பிரயோகமும், சுரண்டலும் )

'சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான குழு' சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்குமாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு சில சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு சுவரொட்டிகளை உருவாக்கியுள்ளது. இச் சுவரொட்டிகளூடாக சமூகமட்டத்திலுள்ள அனைவரும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான விழிப்புணர்வை பெறக்கூடியதாகவிருக்கும்.

வயதில் குறைந்த ஆட்சேர்க்கப்பட்ட சிறுவர்களுக்காக பரிந்து பேசுதலும்,குடும்பத்துடன் மீள் இணைத்தல் செயற்பாடும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம்

ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்களினால் இன்று கொண்டாடப்படும் ஐக்கிய நாடுகள் தினக்கொண்டாட்டத்தினை யு. என். ஏச். சி. ஆர் கிளிநொச்சி நிறுவனமும் இணைந்து கொண்டாடுகிறது. இந்நிகழ்வானது பல நாடுகளில் கொண்டாடப்படுகிறது. தமது சொந்த நாட்டில் சட்டரீதியான தண்டனைக்குள்ளாகலாம் என்ற பயத்தின் காரணமாக தமது சொந்த நாட்டிலிருந்து புலம்பெயரும் மக்களுக்கு சர்வதேச பாதுகாப்பு வழங்குவதற்கு ஐ. நா சபையினால் யு. என். ஏச். சி. ஆர் ற்கு ஆணையிடப்பட்டுள்ளது. இவ் வகையானவர்கள் அகதிகள் என அழைக்கப்படுகின்றார்கள்.

பிரச்சினை காரணமாக ஏற்படும் வன்முறைச் சம்பவங்களினால், ஒட்டுமொத்தமான மனித உரிமை, மீறல்களால், மனப்பிரேமையை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களினால் தமது இடத்தைவிட்டு அகற்றப்பட்டவர்களைப் பாதுகாப்பது என்பது யு. என். ஏச். சி. ஆர் ற்கு ஒரு பிரச்சினைக்குரிய சவாலாக இருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் நலன்புரி முகாமுக்குள் இருக்க வேண்டிய நிலையோ, மறைந்து இருப்பதுதான் தெரிவு என்றோ அல்லது இவர்கள் வேறு சமூகத்துடன் இணைந்து கொள்பவர்கள் போன்றோர்கள் தான் மிகவும் இக்கட்டான நிலைமைக்குட்பட்டவர்களாகிறார்கள். அகதிகளைப் பாதுகாப்பதுதான் யு. என். ஏச். சி. ஆர் இன் பிரதான கடமையாக இருந்தபோதிலும் ஐ. நா சபையானது இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி செய்யவும் பாதுகாக்கவும்கூட தனது ஆணையை வழங்கியுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக பல பேர் உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

விசேடமாக 1983இல் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரம் மற்றும் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட பலதரப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் என்பன மக்களைத் தங்கள் வழக்கமான இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர வேண்டிய நிலைக்குத்தள்ளியது. இதனால் இவர்கள் உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அகதிகள் சுமார் 130,000 உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 68,500 பேர் வரை தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் இருக்கிறார்கள். 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் படி இந்தியாவிலுள்ள அகதிகள் இலங்கைக்கு மீளத்திரும்புதலுடன் யு. என். ஏச். சி. ஆர் இலங்கையில் செயற்படத்தொடங்கியது.

இலங்கை அரசாங்கம் யு. என். ஏச். சி. ஆர் ஐ இம் மீளத்திரும்புதல் நடவடிக்கைக்கு உதவும்படி கேட்டுக்கொண்டது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் 2002 மாசியில் ஏற்பட்டபோர் நிறுத்தம் ஏற்படும் வரை இலங்கையில் 800,000 உள்ளூர் இடம்பெயர்ந்தவர்கள் இருந்தார்கள். இதன்பின் சுமார் நான்கு இலட்சம் பேர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிவிட்டார்கள்-இன்னும் யு. என். ஏச். சி. ஆர் இன் கவனத்திற்கு உட்பட்டவர்களாக சுமார் 340,000 பேர் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களுடனும் தங்கியுள்ளார்கள்.

யு. என். ஏச். சி. ஆர் ஆனது தனது அலுவலகத்தை 1990 ஆம் ஆண்டிலிருந்து (மடு) ஆரம்பித்துள்ளது. அன்று தொடக்கம் யு. என். ஏச். சி. ஆர் நிறுவனமானது ஏற்கனவே உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களுக்கும் புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கும் பாதுகாப்பையும் உதவியையும் வழங்கி வந்தது. அத்துடன் போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பின் மீளத்திரும்பியவர்களுக்கும் உதவிகள் வழங்கியுள்ளது. பிரச்சினையான காலத்தில் குறிப்பாக 1996இல் பெரும் எண்ணிக்கையான மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தபோதும் அதன் பின்பும் யு. என். ஏச். சி. ஆர் மல்லாவி மற்றும் மடுக் காரியாலயங்கள்

இடம்பெயர்ந்தவர்களின் அவசர அடிப்படைத்தேவைகளான குடிநீர், வருவாய் வளத்திற்கான உதவி, அவசர கால இல்லிடம், மருந்துப்பொருட்களை கொண்டு வருதல், க.பொ.த பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொண்டுவருதல் மற்றும் நெருங்கிய உறவினர்க்கு அவசர செய்திகளைப் பரிமாறுதல், சமூக சேவைகள், கல்விக்கான உதவிகள் போன்றவற்றினை அரசுடனும் மற்றும் ஏனைய தரப்பாருடனும் ஒருங்கிணைந்து செயற்படுத்தியது.

கிளிநொச்சியிலுள்ள யு. என். ஏச். சி. ஆர் அலுவலகமானது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வேலைசெய்கிறது. அத்துடன் உள்ளூர் இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடத்திற்கு திரும்புவதற்கும் உதவிகள் செய்கிறது. யு. என். ஏச். சி. ஆர் ஆனது பாதிப்படையக்கூடியவர்களான பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்டவர்களுக்கும் ➡

மிகவும் பாதிக்கப்படக்கூடிய தனிநபர்களுக்கும் விதவைகளுக்கும் அங்கவீனமுற்றவர்களுக்கும் பாதுகாப்பையும் உதவியையும் செய்து வருகின்றது. அதே நேரம் உள்ளூர் இடம்பெயர்ந்த பாதிப்படையக்கூடிய மக்களுக்கு வருமானமூட்டல், மீளவேய்தல் குடிநீர் வசதி மற்றும் ஏனைய உதவிகளையும் செய்து வருகிறது.

மிகுதியாக இருக்கின்ற உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களுக்கு நீடித்த தீர்வைக்காணும் முகமாக காணியற்ற உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தலை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து வகுத்துக்கொண்டிருக்கிறது.

# ஐக்கிய நாடுகளின் மனிதநேய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் அலுவலகம் (யு.என்.ஒச்சா)

## United Nation Office for Coordination of Humanitarian Affairs (UN OCHA)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 'யு.என்.ஒச்சா'வின் முதலணி ஜனவரி 2005 இல் இலங்கைக்குவந்தது. தனது தலைமையகத்தை கொழும்பில் நிறுவியதோடு தீவின் ஏனைய பாதிக்கப்பட்ட பகுதிகளின் ஒருங்கிணைப்புப் பணிக்காக கிளிநொச்சி, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய இடங்களில் 35 பணியாளர்களுடன் "கள இணைப்பு அலுவலகங்கள்" திறக்கப்பட்டன. கிளிநொச்சி அலுவலகம் வடக்கின் சுனாமிப்பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியவற்றின் மனிதாபிமான நடவடிக்கைகளை ஒன்றிணைக்கிறது.

'யு.என்.ஒச்சா'வானது மனித இனத்தின் தேவைகளை மதித்தல்., செயல்முறைக்கொள்கைகளின் அபிவிருத்தி, மனிதநேயத்தை ஆதரித்தல் என்னும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் ஒன்றாக ஐ.நா ஸ்தாபனத்தால் 1998ம் வருடம் 'நியுயோர்க்' நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. ஐ.நாவின் முழு உதவிப்பணிகளும் - அவை இயற்கை அனர்த்தங்களுக்கோ அல்லது நாசகார நடவடிக்கைகளுக்கோ அல்லது குழப்பமான கலவரவேளையிலோ – சரியான வகையில், உரிய வேளையில் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைய 'ஒச்சா'வின் ஊழியர்கள் துணைபுரிகிறார்கள்.

ஐ.நா வின் வதிவிடப்பிரதிநிதி, வெவ்வேறுபட்ட ஐ.நா நிறுவனங்களின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்காக 'ஒச்சா' வானது அலுவலகரீதியான அனுசரணையை வழங்குகிறது. ஏனைய ஐ.நா நிறுவனங்களைப்போல நேரடியான திட்டஅமுலாக்கல் செயற்பாடுகளில் 'ஒச்சா' ஈடுபடுவதில்லை என்றாலும் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுடனும், அதிகார வர்க்கத்தினருடனும் இணைந்து ஐ.நா நிறுவனங்கள் மக்களுக்காக பணியாற்றுவதை '.ஒச்சா' உறுதிசெய்கிறது.

நெருக்கடி வேளைகளின்போது பொதுக்கோட்பாடுகளை ஸ்தாபித்தல், தேவைகளைச்சரியாக இனங்கண்டு முன்னுரிமையளித்தல் போன்ற செயற்பாடுகளில் இந்நிறுவனத்தின் பங்கு காத்திரமானது. கருத்தரங்குகள் கூட்டங்களை ஒழுங்குபடுத்தல், தகவல்களைத் திரட்டுதல் என்பவற்றோடு நிறுவனங்களுக்கும் பயனாளிகளுக்குமிடையில் தகவல்களைப்பரிமாறுதல் போன்ற பணிகளையும் இது ஆற்றுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான அதேவேளையில் சரியான உதவிகள் கிடைக்கப்பெறுவதை விருத்திசெய்வது 'ஒச்சா'வின் இலட்சியங்களில் ஒன்றாகும். பிரதேசமட்டங்களில் ஏற்கனவே வழக்கத்திலுள்ள ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகம், அரசஅதிபர், பிரிவுக்குழுக்கள், சந்திப்புக்கள் என்பவற்றினூடாக பலப்படுத்தி உறுதியான ஒருங்கிணைப்பு முயற்சிகள் வெளிவர'ஒச்சா' பாடுபடுகிறது.

'ஒச்சா'வின் மற்றொரு பரிமாணமாக பொதுவான வேண்டுகை ஒன்றை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் - சர்வதேச மட்டங்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்காக களத்தில் பணியாற்றும் நிறுவனங்களுக்கு நிதிவரவை ஏற்படுத்திக்கொடுப்பதும் அமைகிறது. இலங்கையில் ஆழிப்பேரலை அழிவிற்குப்பின்னர் கடந்த ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட "உடனடி உதவிவேண்டுகை" (Flash appeal) என்பது சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி சேகரிப்பில் முன்னுரிமைச்செயற்பாடாக விளங்கியது. அனர்த்த முகாமைத்துவ தயாரிப்புகள், உள்ளூர் நிறுவனங்களை தயார்படுத்துவதன் மூலம் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் வளர்த்தல் என்பவையும் இந்நிறுவனத்தின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக இருக்கிறது.

மனிதநேய தகவல் நிலையத்தின் (www.humanitarianinfo.org/srilanka ) திறன்சார் நிபுணர்களின் பங்களிப்புடன் 'ஒச்சா' வானது பிரசுரித்து வரும் மாவட்ட நிலையிலான தகவல்கள், வரைபடங்கள் மற்றும் தகவல்முகாமைத்துவ வழிகாட்டிக்கருவிகள் என்பன பல்வேறுபட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு உதவியாக இருக்கின்றன. 'ஒச்சா' வினால் காலத்திற்குக்காலம் பூரணப்படுத்தப்பட்டு வரும் w3 தகவல் தளமானது ( Who is doing what and where – W3 ) நிறுவனங்களின் இயக்கத்திற்கு பக்க பலமாக விளங்குகிறது. சுனாமித்தாக்கத்தின் ஒரு வருடப்பூர்த்தியை நெருங்கும் இத்தருணத்தில் W3 தகவல் தொகுப்பானது அனைத்து உதவிவழங்கும் நிறுவனங்களின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளை விபரிக்கக்கூடியதாகவுள்ள அதேதருணத்தில் இன்னமும் செய்யப்படவேண்டிய விடயங்களையும் விபரிக்கக்கூடியதாக இருக்கிறது.

பல்வேறுபட்ட பிராந்தியங்களில் மக்களின் தேவைகளுக்கு விடையளிக்கவேண்டிய அழுத்தம் சர்வதேச நிறுவனங்களிடையே வளர்ந்துவரும் இக்காலப்பகுதியில் நீண்டகால நோக்கில் அபிவிருத்திப்பணியை முன்னெடுப்பதற்கு பொருத்தமானதொரு அணுகுமுறை உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்து எழுந்திருப்பதும் ஏற்கனவே வழக்கத்தில் உள்ள சமூகப்பொறிமுறைகளை வலுப்படுத்தி தங்கிவாழும் சமுதாய அமைப்பொழுங்கை தவிர்க்க முயல்வதும் 'ஒச்சா'வின் நம்பிக்கைகளாக விளங்குகின்றன.

'ஒச்சா' வின் கிளிநொச்சியை மையமாகக்கொண்ட வடக்கிற்கான அலுவலகமானது சர்வதேச அலுவலர் ஒருவரையும் (Ms. Annabel Tylor) தேசிய மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவரையும் (திரு.ச. கெங்காதரன்) சாரதி நிலையில் ( திரு. ப.மோகன்) ஒருவரையும் கொண்டிருக்கிறது. மேலதிகத் தகவல்களைப்பெற விரும்புவோர் தயவுசெய்து 021 – 2285134



என்ற தொலைபேசி இலக்கத்தினுடாகவோ அல்லது 8/1, கணேசபுரம் கிளிநொச்சி என்ற முகவரியூடாகவோ தொடர்பு கொள்ளவும். அத்துடன் www.ocha. org என்ற வலைத்தளத்தினூடாகவோ 'ஒச்சா'வை அணுகவும்முடியும்.

# கல்வி உலக உணவுத்திட்டம்

WFP

- **கல்விக்கான உணவு வழங்கும் திட்டம்**

வயிற்றுக்கு முழுமையாக உணவு கிடைக்கும் போது மாணவர்களின் கற்றல் திறன் மேம்படுகின்றது. இதில் உலக உணவுத் திட்டமானது வலய கல்விப் பணிமனையுடன் இணைந்து தரம் 1-9 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு போஷணை மிக்க காலை இடைவேளை உணவை வழங்குவதன் மூலம் மாணவர்களிடையே உயர் பாடசாலை வரவு வீதம், குறைவான இடைவிலகுவோர் வீதம், கல்வியில் உயர் தேர்ச்சி மட்டம் என்பவற்றை அடைய ஊக்கமளிக்கின்றது. **"2006 ஆம் ஆண்டில் இத்திட்டமானது வன்னிப் பெருநிலப் பரப்பில் முற்றுமுழுதாக விஸ்தரிக்கப்படும்"**.

உலக உணவுத்திட்டமானது கல்விக்கான உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடைபெறும் பிரிவுகளிலுள்ள பாடசாலை அதிபர்கள் உணவு தயாரிப்போர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு சோளன் சோயா மாவில் பலவகையான உணவுப்பொருட்களைத் தயாரிப்பதற்கு பயிற்சியளிக்குமுகமாக பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி வருகின்றது.

இத்திட்டங்கள் தொடர்பான கண்காணித்தலை இலகுபடுத்துவதற்காகவும் தகவல்களைப் பேணுவதற்காகவும் உலக உணவுத்திட்டமானது பிராந்திய கல்விப் பணிமனைகளுக்கு உந்துருளிகளையும் கணனிகளையும் வழங்கியுள்ளது.

**தாய் சேய் போஷாக்குத் திட்டம்**

- **பிரதியீட்டு உணவூட்டல்**

போஷாக்கு இன்மையின் தீய விளைவுகளால் அதிகளவில் பாதிக்கப்படும் குழுவினராக கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் சிறிய குழந்தைகள் உள்ளனர். இக் குழுவினருக்கு போதியளவு போஷணை உள்ளீடுகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக உலக உணவுத் திட்டமானது சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து போஷணைமிக்க அரைத்த சோளன் சோயா மாவினை அனைத்துக் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்குகின்றது.

- **சுகாதார விழிப்புணர்வும் உணவுச்செய்முறையும், பயிற்சியும்**

உலக உணவுத்திட்டமானது அரைத்த சோளன் சோயா மா கலவையினைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளுக்கு இதனை உளளூரில் கிடைக்கப்பெறும் உள்ளீடுகளைப் பயன்படுத்தி போஷணை மிக்க உணவுப்பொருட்களைத் தயாரிப்பது தொடர்பாகவும் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வினையும் சுகாதாரத்தொண்டர்களின் வீட்டுத்தரிசிப்பின் ஊடாகவும் தாய் சேய் சிகிச்சா நிலையங்களூடாகவும் ஏற்படுத்தி வருகின்றது.

இலங்கையில் முதன்முறையாக பாலியல் நோய்கள் தொற்று நோய்கள் சுகாதார பழக்கவழக்கங்கள் வீதிவிபத்து போஷாக்கு சோளன் சோயா மாவின் பயன்பாடு என்பன தொடர்பாக கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கண்காட்சிக்கு உலக உணவுத்திட்டமானது அனுசரணை வழங்கியிருந்தது. இதில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு பயனடைந்தமை குறிப்பிடத்தக்கது.



- **போசணை நிலை கண்காணிப்பும் ஆய்வும்**

கடந்த ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 வயதிற்குட்பட்ட அனைத்துக்குழந்தைகளினதும் போஷாக்கு நிலைமையினை அறிந்து கொள்ளுமுகமாக உலக உணவுத்திட்டமானது பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினருடனும் மற்றும் மருத்துவ ஆய்வு நிறுவனம், உள்ளூர் சுகாதார சேவைகள் நிறுவனம் ஆகியோருடனும் இணைந்து முற்று முழுதான ஆய்வொன்றினைச் செய்து மேற்கொண்டது.

இரண்டு தசாப்தங்களின் பின் இப்பிரதேசத்தில் போஷாக்கு நிலை விபரம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வாய்வின் முடிவானது இப்பிரதேச குழந்தைகளின் மந்தபோஷாக்கு நிலைமையினை உலகுக்கு உணர்த்தியுள்ளது.

**சமூக சொத்துக்களை உருவாக்கலும் உட்கட்டுமான புனருத்தாரணமும் வேலைக்கான உணவு**

இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக பெரும்பாலான விவசாய உட்கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்டன. அல்லது பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. மீளக்குடியேறும் உள்ளூர் இடப்பெயர்வாளர்களுக்கு துரித சமூக பொருளாதார புனருத்தாரணமானது வன்னியில் அவசியமாகின்றது. உதாரணமாக விவசாய குளங்கள், கால்வாய்கள், விவசாய நிலங்களுக்கான பாதைகள் போன்றவை அடங்குகின்றன.

உலக உணவுத்திட்டமானது வன்னி முழுவதற்குமான உணவுக்கான வேலை நடவடிக்கைகளை இலங்கை அரச திணைக்களங்களூடாகவும் உலகதரிசன நிறுவனத்தினூடாகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினூடாகவும் இணைந்து உணவினை வழங்கி வருகின்றது.

மேலும் வடக்குக் கிழக்கு வீடமைப்பு நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக வங்கியினால் அமுல்படுத்தப்படும் வீடமைப்புத்திட்ட நிர்மாண வேலைகளில் பயனாளிகளின் குடும்ப அங்கத்தவர்களே ஈடுபடுவதால் தொழிலுக்குச் செல்ல முடியாதுள்ள குடும்பங்களுக்கு இக்காலப்பகுதியில் உலக உணவுத்திட்டமானது உணவுப்பொருட்களை வழங்கி வருகின்றது.

வேலைக்கான உணவுத்திட்ட நடவடிக்கையானது குறுகியகால நோக்கில் நலிவுற்ற மக்களுக்கான ஏனைய வேலை வாய்ப்பு அற்ற சந்தர்ப்பத்திலும், வளமற்ற காலத்திலும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகிறது.

விவசாய சமூகக் கட்டமைப்புக்களை புனருத்தாரணம் செய்வதன் மூலம் உணவு, உற்பத்தியை அதிகரிப்பதுடன் அதன் மூலம் நீண்ட காலத்திற்கு தமக்கான உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்றது.

**மனிதவள அபிவிருத்தி**

இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வுகளாலும் கல்வி கற்பதற்கான வசதியற்ற தன்மையும், வேலை வாய்ப்பற்ற தன்மையும், வன்னிக்கான தொழில்சார் திறனுடையவர்களின் அதிகரிப்பைக் குறைத்தது. இதனால் தொழில் பயிற்சி என்பது மிகவும் அவசியமான ஒன்றாக இனங்காணப்பட்டு ஆற்றலுள்ள பயனாளிகள் இலக்காகக் கொள்ளப்பட்டனர். அதன்மூலம் அவர்கள் தமது உழைக்கும் ஆற்றலையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டனர்.

உலக உணவுத் திட்டமானது வன்னி முழுவதும் பல்வேறுபட்ட தொழில்பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு உதவி செய்து வருகின்றது. உதாரணமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், ஆசியாவிற்கான ஜப்பான் நட்புறவுப்பாலம், கிளி தொழிநுட்பக் கல்லூரி முல்லைத்தீவு தொழிநுட்பக் கல்லூரி மற்றும் அரச முகவர் நிறுவனங்கள் என்பனவாகும். ஒவ்வொரு நாள் பயிற்சிக்கும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ஒரு குடும்பத்துக்கான உணவு வழங்கப்படுகிறது. ஏனெனில் இவர்களின் பயிற்சிக்காலத்தில் ஏனைய தொழில்களில் ஈடுபட முடியாது. எனவே அவர்களின் குடும்பத்தினது உணவுப்பாதுகாப்பினை சரியான விதத்தில் உறுதிப்படுத்தும் போது அவர்களது பொறுப்புக்கள் குறைக்கப்பட்டு இலகுவாகக் கல்வியினைத் தொடர வழிவகுக்கின்றது.

**பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்கல்**

**சுழற்சி முறைக் கடன் வழங்கல் திட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில், உலக உணவுத்திட்டமானது 300 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு 2004/2005 ஆம் ஆண்டில் சுழற்சிக் கடன் திட்டத்தை அமுல்படுத்துகின்றது. இத் திட்டமானது அரச அதிபர், மாவட்டச் செயலாளர் மற்றும் உளளூர் கிராமிய மட்ட அமைப்புக்களால் நிர்வகிக்கப்படுகின்றது. பொதுவாக இக்கடன்கள் சிறு கைத்தொழில் அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு, மற்றும் விவசாய உள்ளீடுகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. உலக உணவுத்திட்டமானது மாவட்ட செயலகத்துடன் இணைந்து இந்நிதியினை உச்சப்பயன் பெறும் வகையில் பயன்படுத்துவது தொடர்பான பயனாளிகளுக்கு பயிற்சியினை வழங்கி வருகின்றது.

**பொது உணவு வழங்கல்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது உறவுகளை பொருள் பண்டங்களை தமது தொழில்களை இழந்துள்ளார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுத்திட்டமானது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உடனடி நிவாரணமாக புரட்டாதி 2005 வரை உணவுப்பொருட்களை வழங்கி வந்தது. இதன் தொடர்ச்சியாக சுனாமியால் பாதிக்கப்பட்டு தமது பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ள மக்களுக்காக மார்கழி 2005 வரை உணவுப்பொருட்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுல்படுத்தி வருகின்றது. (சி.13095)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

யா/யா/5500 திருமதி. அன்னலட்சுமி தியாகராசா
யா/யா/5533 திரு. நன்னித்தம்பி சின்னத்துரை
யா/யா/5549 திரு. வைரவி தெய்வேந்திரம்
யா/யா/5555 திரு மாகிறேற் அலெக்ஸ்சாண்டர்
யா/யா/5573 தி ல்லர் தவஞானம்
யா/யா/5607 திரு. மத்தியாஸ் லோறன்ஸ்
யா/யா/5608 திருமதி. மரியநாயகி மரியதாஸ்
யா/யா/5611 திரு. அகஸ்ரீன் யோசப்
யா/யா/5615 திருமதி. வினிபிறெட் மனுவேற்பிள்ளை
யா/யா/5621 திரு. வீரகத்தி இராசதுரை
யா/யா/5628 திருமதி. தங்கம்மா சின்னத்துரை
யா/யா/5649 திருமதி. சொர்ணம் கனகரத்தினம்
யா/யா/5662 திருமதி. திலகவதி செல்வரத்தினம்
யா/யா/5670 திருமதி. தங்கலட்சுமி சுப்பிரமணியம்
யா/யா/5706 திரு. கந்தையாசின்னத்துரை நமசிவாயம்
யா/யா/5716 திருமதி. லட்சுமி குமாரசாமி
யா/யா/5719 திரு. கபிரியேல் செபஸ்தியாம்பிள்ளை
யா/யா/5744 திரு. அந்தோனிப்பிள்ளை டேவிற்
யா/யா/5773 திரு. அல்பிரெட் சின்னத்தம்பி தேவராஜன்
யா/யா/5781 திருமதி. சீதா பொன்னுத்துரை
யா/யா/5791 திருமதி. இராசமணி திரேசா பாக்கியநாதன்
யா/யா/5979 திருமதி. சிவபாக்கியம் சிவப்பிரகாசம்
யா/யா/5997 திரு. மாரிமுத்து சின்னராசா
யா/யா/6066 திருமதி. தேசோவதி பரமானந்தம்
யா/யா/6070 திரு. பொ. பிரான்சிஸ் இராஜசிங்கம்
யா/யா/6071 திருமதி. கிரிஸ்தீன்னம்மா இன்பநாதன்
யா/யா/6079 திருமதி. இராசம்மா கருப்பையா
யா/யா/6115 திருமதி. அன்னம்மா மலக்கியாஸ்
யா/யா/6161 திரு. ஜோன் அலோசியஸ் ராஜரட்ணம்
யா/யா/6220 திரு. கனகரத்தினா அலோசியஸ்ஜெயராஜ்
யா/யா/6228 திருமதி. நாகரத்தினம் சின்னத்துரை
யா/யா/6237 திரு. நாகமணி தம்பிராசா
யா/யா/6267 திரு. இராசையா திலகராசா
யா/யா/6268 திருமதி. கிறிஸ்டபெல் அன்புமணி மகேசன்
யா/யா/6281 திருமதி. தங்கரெத்தினம் பத்மநாதன்
யா/யா/6345 திருமதி. அன்னம்மா யோசேப்
யா/யா/6405 செல்வி. பொன்னம்மா சிதம்பரநாதர்
யா/யா/6433 திருமதி. லில்லி மேரியம்மா பாக்கியநாதன்
யா/யா/6464 திருமதி. மகேஸ்வரி செல்வராசா
யா/யா/ 6468 திரு. கந்தையா குமாரகுலசிங்கம்
யா/யா/6473 திருமதி. அன்னலட்சுமி கணேசன்
யா/யா/6479 திரு. பெஞ்சமின் குணரட்ணம்
யா/யா/6538 திருமதி. மகேஸ்வரி பரமநாதன்
யா/யா/6539 திரு. முத்துக்குமாரசுவாமிஐயர் சந்திரகலாதரசர்மா
யா/யா/6550 திருமதி. சின்னப்பிள்ளை ஜோசப்
யா/யா 6557 திருமதி. சிவமணி நல்லையா
யா/யா/6606 திரு. ஐயன் பிச்சன்

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

யா/கோ/ 22 திரு. சிதம்பரநாதன் கணபதிப்பிள்ளை
யா/கோ/50 திரு. சிற்றம்பலம் மகேந்திரன்
யா/கோ/61 திரு. இராமர் நாகலிங்கம்
யா/கோ/79 திருமதி. புனிதவதி கணபதிப்பிள்ளை
யா/கோ/110 திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம்
யா/கோ/119 திரு. தம்பையா சின்னத்துரை
யா/கோ/130 திரு. இராமையா செல்லத்துரை
யா/கோ/140 திரு. சின்னையா சேனாதிராசா
யா/கோ/144 திரு. கந்தையா சண்முகலிங்கம்
யா/கோ/159 திருமதி. இரத்தினம் துரைசாமி
யா/கோ/162 திரு. கந்தையா தேவராசா
யா/கோ/163 திரு. நாகலிங்கம் துரைசிங்கம்
யா/கோ/199 திரு. இராமுப்பிள்ளை முருகையன்
யா/கோ/202 திருமதி. நவமணி கனகரத்தினம்
யா/கோ/204 திரு. செல்லையா நடராசா
யா/கோ/221 திரு. பொன்னுத்துரை சிவேந்திரன்
யா/கோ/227 திரு. சதாசிவம் சண்முகநாதன்
யா/கோ/236 திரு. இளையதம்பி திருநாவுக்கரசு
யா/கோ/265 திரு. அம்பலவி இராசையா
யா/கோ/274 திருமதி. செல்லம்மா செல்லையா
யா/கோ/287 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/கோ/290 திரு. அப்பாக்குட்டி வேலுப்பிள்ளை
யா/கோ/339 திரு. மூத்ததம்பி ஆனந்தகிஷ்ணன்
யா/கோ/368 திரு. சின்னத்தம்பி காசித்தம்பி
யா/கோ/371 திரு. செல்லையா கந்தசாமி
யா/கோ/380 திரு. சிவகுரு குகதாசன்
யா/கோ/399 திரு. பரமு முத்துலிங்கம்
யா/கோ/410 திருமதி. நல்லம்மா பொன்னுத்துரை
யா/கோ/448 திரு. சிதம்பரம் மூத்தார்
யா/கோ/449 திருமதி. சிவபாக்கியம் சண்முகலிங்கம்
யா/கோ/464 திரு. வேலன் சின்னத்தம்பி
யா/கோ/468 திரு. வேலன் செல்லக்கண்டு
யா/கோ/470 திரு. ஆறன் சின்னத்தம்பி
யா/கோ/498 திரு. பரமு தேவராசா
யா/கோ/555 திருமதி. செல்லம்மா நாகலிங்கம்
யா/கோ/568 திருமதி. இராசம்மா ஆறுமுகம்
யா/கோ/ 570 திரு. இளையதம்பி செல்வராசா
யா/கோ/643 திருமதி. கண்மணி சுந்தரம்
யா/கோ/646 திரு. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை
யா/கோ/662 திரு. மாணிக்கம் குமரேசு
யா/கோ/681 திரு. கதிரமலை மாணிக்கம்
யா/கோ/690 திரு. பொன்னர் நடேசன்
யா/கோ/697 திரு. தம்பு நாகமுத்து
யா/கோ/804 திருமதி. தங்கரத்தினம் சின்னப்பு
யா/கோ/881 திருமதி. ஜெயராணி சபாரத்தினம்
யா/கோ/916 திருமதி. மகேஸ்வரி அம்மா அருமைத்துரை
யா/கோ/928 திரு. கணபதி நடராசா
யா/கோ/932 திரு. கனகசபை நாகராசா
யா/கோ/965 திரு. தம்பிப்பிள்ளை சிவலிங்கம்
யா/கோ/924 திரு. செல்வம் சதாசிவம்
யா/கோ/982 திரு. கயிலாயப்பிள்ளை சிவலிங்கம்
யா/கோ/983 திரு. நாகலிங்கம் சிவநேசன்
யா/கோ/1002 திரு. கந்தர் சின்னையா
யா/கோ/1044 திருமதி. வள்ளிப்பிள்ளை இராசா
யா/கோ/1074 திரு. தம்பிப்பிள்ளை நடராசா
யா/கோ/1080 திரு. செல்லப்பா மகாலிங்கம்
யா/கோ/1081 திரு. மாணிக்கம் பொன்னுத்துரை
யா/கோ/1118 திரு. கந்தையா தில்லாந்துரை
யா/கோ/1131 திருமதி. ஞானசவுந்தரி பாலசுப்பிரமணியம்
யா/கோ/1148 திரு. தம்பு ஜெயச்சந்திரன்
யா/கோ/1162 திரு. தம்பையா கனகசபை
யா/கோ/1192 திருமதி. கனகம்மா இராசலிங்கம்
யா/கோ/1240 திரு. கயிலாசபிள்ளை நாகராசா
யா/கோ/1245 திரு. கந்தன் நல்லான்
யா/கோ/1266 திருமதி. பார்வதி முத்து
யா/கோ/1270 திருமதி. பார்வதி தம்பிப்பிள்ளை
யா/கோ/1289 திருமதி. இராசலட்சுமி குட்டித்தம்பி
யா/கோ/1354 திரு. பஞ்சாட்சரஐயர் சோமசேகரன்
யா/கோ/1375 திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம்
யா/கோ/1390 திரு. முருகுப்பிள்ளை சின்னராசா
யா/கோ/1411 திருமதி. செல்லமுத்து பழனிவேல்
யா/கோ/1413 திரு. சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரஐயர்
யா/கோ/1415 திரு. தில்லையம்பலம் செல்வரட்ணம்
யா/கோ/1439 திருமதி. தெய்வானைப்பிள்ளை ஐயாத்துரை
யா/கோ/1440 திரு. இளையதம்பி துரைராசா
யா/கோ/1453 திரு. அன்ரனி அரியரட்டினம் தோமஸ்
யா/கோ/1460 திரு. கந்தையா தருமராசா
யா/கோ/1500 திரு. சுப்பிரமணியம் கணேசலிங்கம்
யா/கோ/1512 திரு. அம்பலவாணர் குமாரவேலு
யா/கோ/1535 திரு. கந்தையா நவரத்தினம்
யா/கோ/1544 திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தன்
யா/கோ/1546 திருமதி. பார்வதி சின்னத்துரை
யா/கோ/1557 திரு. சின்னப்பா பரமநாதன்
யா/கோ/1625 திரு. செல்லையா தம்பிராசா
யா/கோ/1648 திருமதி. தெய்வேந்திரராணி வேலாயுதர்
யா/கோ/1668 திரு. குட்டிஐயா யோகீஸ்வரன்
யா/கோ/1690 திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி
யா/கோ/1702 திருமதி. பாக்கியம் சோமசுந்தரம்
யா/கோ/1703 திருமதி. பரமேஸ்வரி கதிர்காமநாதன்
யா/கோ/1713 திருமதி. பரமேஸ்வரி இராசரத்தினம்
யா/கோ/1722 திரு. இளையதம்பி இராசரத்தினம்
யா/கோ/1732 திரு. வேலுப்பிள்ளை செல்வரத்தினம்
யா/கோ/1759 திரு. பொன்னுத்துரை சிவநேயன்
யா/கோ/1766 திருமதி. திலகவதி கிருஷ்ணானந்தம்
யா/கோ/1792 திரு. முத்தையா அப்பையா
யா/கோ/1831 திருமதி. இலட்சுமிபிள்ளை கந்தசாமி
யா/கோ/1844 திரு. சின்னக்குட்டி மார்க்கண்டு
யா/கோ/1851 திரு. அம்பலவாணர் நெல்லிநாகலிங்கம்
யா/கோ/1863 திருமதி. பராசக்தி வரதராசன்
யா/கோ/1872 திருமதி. புஸ்பவதி குமாரசாமி
யா/கோ/1879 திரு. இளையதம்பி பழனி
யா/கோ/1900 திரு. செல்வன் சீனியன்
யா/கோ/1929 திருமதி. சிவபாக்கியம் சின்னத்தம்பி
யா/கோ/1954 திரு. யோசேப் தம்பிஐயா
யா/கோ/1974 திருமதி. அன்னப்பிள்ளை கந்தன்
யா/கோ/1995 திரு. நடராசா ஈஸ்வரநாதன்
யா/கோ/1996 திருமதி. இலச்சுமி தம்பையா
யா/கோ/2008 திரு. சுப்பிரமணியம் யோகலிங்கம்
யா/கோ/2050 திருமதி. மகாதேவி அலகேந்திரன்
யா/கோ/2066 திருமதி. நாகரத்தினம் வேலுப்பிள்ளை
யா/கோ/2076 திரு. சபாரத்தினம் பத்மநாதன்
யா/கோ/2102 திருமதி. இராசலட்சுமி சிவநேசன்
யா/கோ/2163 திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம்
யா/கோ/2176 திருமதி. செல்வரத்தினம் நடராசா
யா/கோ/2210 திருமதி. தவயோகம் சிற்றம்பலம்
யா/கோ/2217 திருமதி. தங்கச்சிஅம்மா அருளம்பலம்
யா/கோ/2250 திரு. இரத்தினம் கந்தசாமி
யா/கோ/2268 திரு. கந்தன் பசுபதி
யா/கோ/2272 திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
யா/கோ/2287 திரு. கணபதிப்பிள்ளை சுவாமிநாதன்
யா/கோ/2288 திரு. சின்னையா சிவகுருநாதன்
யா/கோ/2295 திரு. தம்பிமுத்து செல்வரத்தினம்
யா/கோ/2316 திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
யா/கோ/2331 திரு. சதாசிவம் மகேந்திரன்
யா/கோ/2372 திரு. நல்லதம்பி சின்னத்தம்பி
யா/கோ/2388 திரு. நல்லதம்பி வீரசிங்கம்
யா/கோ/2405 திரு. சரவணை கிஸ்ணபிள்ளை
யா/கோ/2431 திரு. இராமலிங்கம் செல்லையா
யா/கோ/2432 திருமதி. முத்தம்மா சிவானந்தன்
யா/கோ/2440 திரு. மாணிக்கம் தியாகராசா
யா/கோ/2472 திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி
யா/கோ/2473 திரு. முத்துசாமி கணேசன்
யா/கோ/2522 திரு. சின்னவன் அப்பையா
யா/கோ/2568 திரு. கிருஷ்ணபிள்ளை வீரசிங்கம்
யா/கோ/2577 திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணன்
யா/கோ/2608 திரு. கணபதிப்பிள்ளை குலநாயகம்
யா/கோ/2634 திரு. நாகமுத்து கந்தப்பு
யா/கோ/2640 திரு. செல்லத்துரை கணபதிப்பிள்ளை
யா/கோ/2650 திருமதி. மகேஸ்வரி வல்லிபுரம்
யா/கோ/2663 திரு. சிவனடியார் மச்சகேந்திரன் (சிவபாதம்)
யா/கோ/2699 திருமதி. பொன்னம்மா கந்தையா
யா/கோ/2709 திரு. மாதர் இராசா
யா/கோ/2720 திரு. சரவணமுத்து இரத்தினம்
யா/கோ/2723 திருமதி. இராசமணி சதாசிவம்
யா/கோ/2735 திருமதி. இராசமணி நவரத்தினம்
யா/கோ/2755 திரு. சித்திவிநாயகம் சிவசுப்பிரமணியம்.
யா/கோ/2759 திருமதி. செல்லபாக்கியம் குமார்
யா/கோ/2784 திரு. சந்தன் சின்னத்தம்பி
யா/கோ/2802 திருமதி. சிலோஜனா சபாவதி
யா/கோ/2834 திருமதி. தவமணி நாகலிங்கம்
யா/கோ/2836 திருமதி. தவமணி இராசையா
யா/கோ/2837 திரு. மாதர் தம்பித்துரை
யா/கோ/2844 திரு. நாகலிங்கம் தம்பிராசா
யா/கோ/2851 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
யா/கோ/2861 திருமதி. தனபாக்கியம் பாலசிங்கம்
யா/கோ/2875 திருமதி. விஜயலக்சுமி ரட்ணம்
யா/கோ/2879 திரு. வேலுப்பிள்ளை வீரசிங்கம்
யா/கோ/2894 திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம்
யா/கோ/2919 திரு. மயிலு கதிர்காமு
யா/கோ/2943 திருமதி. புண்ணியவதி சிங்கரத்தினம்
யா/கோ/2951 திருமதி. இரத்தினாம்பிகை துரைநாயகம்
யா/கோ/3007 திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம்
யா/கோ/3029 திருமதி. யோகமலர் பாலசிங்கம்
யா/கோ/3040 திருமதி. அன்னம்மா செல்லன்
யா/கோ/3063 செல்வி. ஜெயலக்சுமி நாகராஜா
யா/கோ/3098 திரு. சின்னத்தம்பி காங்கேஸ்வரன்
யா/கோ/3120 திரு. நாகர் மாணிக்கம்
யா/கோ/3166 செல்வி. பரமேஸ்வரி கதிரேசு
யா/கோ/3168 திருமதி. பூமாதேவி மதியாபரணம்
யா/கோ/3215 திரு. சீனிவாசகம் நவரத்தினம்
யா/கோ/3217 திரு. கந்தையா சிவலிங்கம்
யா/கோ/3280 திருமதி. தெய்வானை பொன்னர்
யா/கோ/3298 திரு. செல்லப்பா தெட்சணாமூர்த்தி
யா/கோ/3305 செல்வி. விமலாஜனி கந்தையா
யா/கோ/3312 திரு. இளையதம்பி பத்மநாதன்
யா/கோ/3330 திரு. மார்க்கண்டு காங்கேசு
யா/கோ/3342 திருமதி. பராசக்தி கார்த்திகேசு
யா/கோ/3383 திருமதி. பரஞ்சோதி சிவஞானம்
யா/கோ/3406 திருமதி. றோசம்மா கணேசு
யா/கோ/3423 திரு. தம்பு சுப்பிரமணியம்
யா/கோ/3439 திருமதி. செல்லமுத்து அருளானந்தம்
யா/கோ/3458 திரு. இராசசிங்கம் சகாதேவன்
யா/கோ/3479 திரு. இரத்தினம் தவராசா
யா/கோ/3506 திரு. இராசையா அழகரத்தினம்
யா/கோ/3547 திரு. நடேசர் கண்ணலிங்கம்
யா/கோ/3550 திரு. தம்பிஐயா கந்தநாதன்
யா/கோ/3574 திரு. கந்தையா முத்துக்குமாரசாமி
யா/கோ/3579 திருமதி. மனோன்மணி சின்னராசா
யா/கோ/3591 திருமதி. சிவபாக்கியம் நடராசா
யா/கோ/3628 திருமதி. இராசமணி இராசரத்தினம்
யா/கோ/3748 திருமதி. சின்னம்மா நடேசன்
யா/கோ/3785 திரு. மனுவேல்பிள்ளை ஜேசுதாசன்
யா/கோ/3788 திருமதி. யூலியற்பற்றிசியா ஜெயராஜா
யா/கோ/3789 திருமதி. கௌசலாதேவி குணரத்தினம்
யா/கோ/3801 திரு. குழந்தைவேலு கணேசபிள்ளை
யா/கோ/3802 திருமதி. கமலாதேவி தனிகாசலம்
யா/கோ/3812 திருமதி. குணவதி கிருஷ்ணபிள்ளை
யா/கோ/3827 திருமதி. லீலாவதி சின்னத்துரை
யா/கோ/3870 திருமதி. பராசக்தி சோதிராசா
யா/கோ/3884 திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
யா/கோ/3890 திருமதி. பிலோமினா திருச்செல்வம்
யா/கோ/3895 திருமதி. ரோகினியம்மா சபாரத்தினம்
யா/கோ/3899 திரு. ஆசைப்பிள்ளை இரத்தினம்
யா/கோ/3903 திரு. சூரன் இராசு
யா/கோ/3910 திரு. கனகபூஷணம் சண்முகநாதன்
யா/கோ/3931 திரு. குமாரசாமி சிவகுருநாதன்
யா/கோ/3969 திரு. நாகமுத்து சுப்பிரமணியம்
யா/கோ/3975 திரு. சிங்கராசா துரையப்பா
யா/கோ/3988 திரு. பெரியதம்பி தம்பிராசா
யா/கோ/4002 திரு. வேலுப்பிள்ளை வீரவாகு
யா/கோ/4052 திரு. சண்முகநாதன் நடேசபிள்ளை
யா/கோ/4078 திரு. நல்லதம்பி சற்குணநாதன்
யா/கோ/4081 திரு. பொன்னர் செல்லத்துரை
யா/கோ/4089 திரு. செல்லத்துரை சுந்தரலிங்கம்
யா/கோ/4093 திரு. இராமலிங்கம் செகசோதி
யா/கோ/4167 திருமதி. கண்ணகை கந்தையா
யா/கோ/4198 திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரம்
யா/கோ/4204 திரு. கணபதிப்பிள்ளை முருகேசு
யா/கோ/4226 திரு. கந்தையா நடராசா
யா/கோ/4258 திரு. முருகுப்பிள்ளை இரத்தினம்
யா/கோ/4264 திரு. கந்தையா இராசகுலசிங்கம்
யா/கோ/4318 திரு. பெரியதம்பி சின்னத்துரை
யா/கோ/4346 திரு. கந்தையா நடராசா
யா/கோ/4388 திரு. கதிரேசு முருகேசு
யா/கோ/4400 திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம்
யா/கோ/4424 திரு. தென்னர் சின்னத்தம்பி
யா/கோ/4441 திரு. பெரியதம்பி செல்லத்துரை
யா/கோ/4516 திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
யா/கோ/4606 திரு. ஐயம்பிள்ளை தர்மலிங்கம்
யா/கோ/4683 திருமதி. மனோன்மணி பொன்னுத்துரை.
யா/கோ/4714 திரு. தம்பு நடேசு
யா/கோ/4715 திருமதி. நவமணி கதிரவேலு
யா/கோ/4717 திரு. தம்பிப்பிள்ளை நாகலிங்கம்
யா/கோ/4733 திரு. மாதன் சண்முகசுந்தரம்
யா/கோ/4754 திரு. சின்னையா இராசா
யா/கோ/4764 திரு. தம்பு துரைசிங்கம்
யா/கோ/4772 திருமதி. இராசமணி சுந்தரலிங்கம்
யா/கோ/4784 திருமதி. சோதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
யா/கோ/4790 திரு. வேலாயுதம் சந்திரசேகரம்பிள்ளை

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

யா/கோ/4791 திருமதி.சரஸ்வதி இராசரத்தினம்
யா/கோ/4800 திருமதி.சிவப்பி வேலன்
யா/கோ/4821 திரு.காசிப்பிள்ளை சின்னையா
யா/கோ/4867 திரு.கந்தையா வேலாயுதம்
யா/கோ/4884 திரு.வல்லிபுரம் யோககுலசிங்கம்
யா/கோ/4899 திரு.குமாரசாமி பாலசுப்பிரமணியம்
யா/கோ/4913 திரு.சேதுபதி கனகசபாபதி
யா/கோ/4921 திரு.சிவலை கிருஷ்ணன்
யா/கோ/4945 திரு.இளையகுட்டி சுப்பிரமணியம்
யா/கோ/4974 திரு.முதலி கந்தையா
யா/கோ/5036 திரு.ஆபிரகாம் இப்பன்
யா/கோ/5045 திரு.செல்வரத்தினம் கணேசு
யா/கோ/5049 திரு.சண்முகம் அமிர்தலிங்கம்
யா/கோ/5094 திரு.கனகசபை குககுமாரராசா
யா/கோ/5121 திருமதி.மகேஸ்வரி சுப்பிரமணியராசா
யா/கோ/5129 திரு.சிவகுருநாதன் நித்தியானந்தன்
யா/கோ/5145 திரு.முத்தையா பேரம்பலம்
யா/கோ/5154 திருமதி.பூமணி இரத்தினம்
யா/கோ/5191 திருமதி.இராசமணி ஐயாத்துரை
யா/கோ/5193 திருமதி.செல்வநாயகி வேலாயுதபிள்ளை
யா/கோ/5215 திரு.கனகசபை ஸ்கந்தராசா
யா/கோ/5223 திருமதி.சிவபாக்கியம் இராசரத்தினம்
யா/கோ/5244 திரு.நமசிவாயம் சுந்தரமூர்த்தி
யா/கோ/5271 திருமதி.தெய்வானைப்பிள்ளை கந்தவனம்
யா/கோ/5282 திரு.செல்லையா வெற்றிவேலு
யா/கோ/5294 திரு.செல்லத்துரை யோகரட்ணம்
யா/கோ/5298 திரு.செல்லன் அப்புத்துரை
யா/கோ/5304 திரு.சின்னத்தம்பி வல்லிபுரம் பாலசிங்கம்
யா/கோ/5367 திரு.வேலன் தம்பையா
யா/கோ/5419 திரு.சின்னத்தம்பி செல்லத்துரை
யா/கோ/5420 திரு.நாகமுத்து சீவரத்தினம்
யா/கோ/5435 திருமதி.மகேஸ்வரி சின்னப்பு
யா/கோ/5443 திருமதி.செங்கமலம் துரைசிங்கம்
யா/கோ/5466 திருமதி.திலகேஸ்வரி குணசிங்கம்
யா/கோ/5473 திரு.வயிரமுத்து வேலாயுதபிள்ளை
யா/கோ/5490 திருமதி.ஞானரத்தினம் செல்வரத்தினம்
யா/கோ/5504 திருமதி.கனகம்மா பொன்னுத்துரை
யா/கோ/5510 திரு.அருணாசலம்கனகசபைதருமலிங்கம் கிருஷ்ணராசா
யா/கோ/5522 திரு.வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம்
யா/கோ/5529 திருமதி.நவலட்சுமி தவராசா
யா/கோ/5546 திருமதி.புஷ்பமலர் மயில்வாகனம்
யா/கோ/5550 திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்
யா/கோ/5576 திருமதி.சோதிமணி சச்சிதானந்தர்
யா/கோ/5596 திருமதி.சிவயோகம் சுப்பிரமணியம்
யா/கோ/5626 திரு.நவரட்ணம் தவநீதராஜா
யா/கோ/5658 திருமதி.அன்னம்மா இரத்தினம்
யா/கோ/5690 திருமதி.சின்னப்பிள்ளை செல்லையா
யா/கோ/5691 திரு.கதிரன் பொன்னுத்துரை
யா/கோ/5698 திருமதி.சிவபாக்கியம் தம்பிராசா
யா/கோ/5706 திரு.கதிரன் செல்லன்
யா/கோ/5707 திரு.தேவகேசன் தியடோர்
யா/கோ/5725 திரு.வல்லிபுரம் ஆறுமுகம்
யா/கோ/5740 திரு.சின்னையா ஜெகநாதன்
யா/கோ/5742 திரு.சபாபதி கனகராசா
யா/கோ/5745 திரு.பொன்னுத்துரை குணசிங்கம்
யா/கோ/5748 திருமதி.கணேஸ்வரி மகோதயலிங்கம்
யா/கோ/5762 திருமதி.கமலாம்பிகை கிருஷ்ணசாமி
யா/கோ/5818 திருமதி.பத்மாவதி கனகரட்னம்
யா/கோ/5825 திரு.பொன்னுத்துரை இராமச்சந்திரன்
யா/கோ/5828 திருமதி.இராசபூரணி செல்வரத்தினம்
யா/கோ/5830 திரு.பொன்னுத்துரை சிங்கராசா
யா/கோ/5845 திரு.இரத்தினம் செல்வநாயகம்
யா/கோ/5861 திரு.இராசையா சுப்பிரமணியம்
யா/கோ/5868 திரு.கந்தையா சுப்பிரமணியம்
யா/கோ/5920 திருமதி.பூரணம் இராசன்
யா/கோ/5959 திருமதி.அரியமலர் முத்துராசா
யா/கோ/5987 திரு.தம்பிப்பிள்ளை கணேசபிள்ளை
யா/கோ/5989 திரு.சரவணமுத்து கந்தசாமி
யா/கோ/5994 திரு.செல்லையா குஞ்சிதபாதம்
யா/கோ/6000 திருமதி.மீனாம்பிகை கணேசலிங்கம்
யா/கோ/6037 திரு.நடராசா பரமசிவம்
யா/கோ/6053 திருமதி.இராசாத்தி கந்தையா
யா/கோ/6054 திரு.தம்பையா இரத்தினசபாபதி
யா/கோ/6076 திரு.செல்லையா சின்னத்துரை
யா/கோ/6088 திரு.சிவக்கொழுந்து சீனிவாசகம்
யா/கோ/6137 திரு.சாமிநாதக்குருக்கள் பாலசுந்தரக்குருக்கள்
யா/கோ/6182 திரு.செல்லத்துரை கணேசமணி
யா/கோ/6210 திருமதி.உதயமணி மயில்வாகனம்
யா/கோ/6211 திரு.சீனிவாசகம் சற்குணானந்தம்
யா/கோ/6255 திருமதி.அன்னலட்சுமி நடராசா
யா/கோ/6289 திருமதி.ஞானபூபதி அருளம்பலம்
யா/கோ/6303 திருமதி.மகேஸ்வரி வேலாயுதபிள்ளை
யா/கோ/6308 திருமதி.பரமேஸ்வரி இளையதம்பி
யா/கோ/6310 திரு.சிவக்கொழுந்து சுப்பிரமணியம்
யா/கோ/6321 திருமதி.முத்தம்மா இரத்தினசபாபதிப்பிள்ளை
யா/கோ/6346 திரு.மரியாம்பிள்ளை பிலிப் இராஜநாயகம்
யா/கோ/6350 திருமதி.புவனேஸ்வரி செல்லத்துரை
யா/கோ/6391 திரு.செல்லையா தங்கராசா
யா/கோ/6422 திருமதி.நகுலேஸ்வரி சதாசிவம்
யா/கோ/6427 திருமதி.சிதம்பரநாயகி கார்திகேசு
யா/கோ/6442 திருமதி.திரேசாறீற்ம்மா அமரசிங்கம்
யா/கோ/6449 திருமதி.செல்லாச்சிப்பிள்ளை சச்சிதானந்தன்
யா/கோ/6485 திரு.கந்தையா கனகரத்தினம்
யா/கோ/6509 திரு.வல்லி செல்லையா
யா/கோ/6518 திருமதி.அரியம் சிவசம்பு
யா/கோ/6522 திருமதி.சிவநாயகி நடராசா
யா/கோ/6589 திரு.தம்பு செல்வராசா
யா/கோ/6608 திருமதி.சிவாம்பிகை திருநாவுக்கரசு
யா/கோ/6617 திருமதி.திரேசம்மா மாட்டீன்
யா/கோ/6621 திரு.நாகன் கிருஷ்ணன்
யா/கோ/6623 திருமதி.பவளம் தில்லையம்பலம்
யா/கோ/6632 திருமதி.இராசமணி வேலுப்பிள்ளை
யா/கோ/6640 திருமதி.அருளம்மா திருச்செல்வம்
யா/கோ/6651 திருமதி.அன்னலட்சுமி துரைராசா
யா/கோ/6663 திருமதி.லீலாவதி நடராஜபிள்ளை
யா/கோ/6726 திரு.வேலாயுதம் பரராஜசிங்கம்
யா/கோ/6753 திரு.பெரியதம்பி செல்லத்துரை
யா/கோ/6764 திருமதி.விஜயலட்சுமி முத்துத்தம்பி
யா/கோ/6789 திருமதி.தனபாக்கியம் கதிரவேலு
யா/கோ/6793 திருமதி.கனகம்மா வினாசித்தம்பி
யா/கோ/6800 திரு.சண்முகம் பரஞ்சோதி
யா/கோ/6823 திரு.நாகமணி பொன்னுத்துரை
யா/கோ/6830 திரு.சின்னட்டி முருகன்
யா/கோ/6841 திரு.வினாசித்தம்பி வேலாயுதபிள்ளை
யா/கோ/6866 திரு.பொன்னயைா கந்தையா
யா/கோ/6880 திருமதி.இராசம்மா பொன்னையா
யா/கோ/6885 திரு.சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன்
யா/கோ/6893 திருமதி.அன்னப்பிள்ளை ஐயாத்துரை
யா/கோ/6911 திரு.வேலன் இராசதுரை
யா/கோ/6931 திரு.அ.மரியம்பிள்ளை இராசேந்திரம்
யா/கோ/6934 திரு.மார்க்கண்டு நடராசா
யா/கோ/6935 திருமதி.சிவக்கொழுந்து பொன்னுத்துரை
யா/கோ/6961 திருமதி.மகேஸ்வரி பழனித்துரை
யா/கோ/6982 திரு.சித்தன் சண்முகம்
யா/கோ/6983 திரு.முருகன் சின்னத்துரை
யா/கோ/7000 திரு.நாகமுத்து சின்னத்தம்பி
யா/கோ/7041 திரு.சின்னத்தம்பி குருநாதபிள்ளை
யா/கோ/7049 திருமதி.செல்லம்மா அருமைநாயகம்
யா/கோ/7081 திருமதி.சிவமலர் மகேந்திரா
யா/கோ/7089 திரு.இராமலிங்கம் ஏபிரகாம் இரத்தினராஜா
யா/கோ/7126 திருமதி.குணமணி செல்லத்துரை
யா/கோ/7138 திருமதி.இராசலட்சுமி சிவசாமி
யா/கோ/7217 திருமதி.பத்மாசனி இராதாகிருஷ்ணன்
யா/கோ/7271 திரு.சின்னத்தம்பி ஜெயராசசிங்கம்
யா/கோ/7274 திரு.கனகரத்தினம் சபாரத்தினம்
யா/கோ/7277 திருமதி.லட்சுமி இராசையா
யா/கோ/7298 திருமதி.தெய்வானை கிருஸ்ணன்
யா/கோ/7332 திரு.வைத்திலிங்கம் துரைராஜா
யா/கோ/7353 திருமதி.சின்னம்மா இராமலிங்கம்
யா/கோ/7427 திரு.முருகன் சைமன்
யா/கோ/7441 திருமதி.இரத்தினம். இராசலிங்கம்
யா/கோ/7451 திரு.ஆழ்வான் தில்லையம்பலம்
யா/கோ/7454 திருமதி.நாகேஸ்வரி முருகேசு
யா/கோ/7462 திருமதி.பூரணம் சுப்பிரமணியம்
யா/கோ/7516 திருமதி.அகிலாண்டேஸ்வரி துரைராசா
யா/கோ/7522 திரு.வயித்திலிங்கம் இராசரத்தினம்
யா/கோ/7541 திரு.வைரமுத்து நடராசா
யா/கோ/7556 திரு.சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை
யா/கோ/7586 திரு.வயிரவன் ஆசீர்வாதம்
யா/கோ/7587 திரு.சுப்பையா பொன்னம்பலம்
யா/கோ/7600 திரு.சரவணமுத்து சங்கரப்பிள்ளை
யா/கோ/7659 திரு.தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/கோ/7672 திருமதி.செல்லமுத்து துரைராசா
யா/கோ/7679 திருமதி.சற்குணசோதிமலர் சந்திரசேகரம்
யா/கோ/7689 திருமதி.பொன்னம்மா சின்னத்தம்பி
யா/கோ/7730 திரு.வல்லி இரத்தினம்
யா/கோ/7753 திரு.கந்தையா சுப்பிரமணியம்
யா/கோ/7778 திரு.வயிரவன் கந்தையா
யா/கோ/7781 திரு.தம்பையா அருணாசலம்
யா/கோ/7818 திரு.செல்லையா சண்முகலிங்கம்
யா/கோ/7820 திரு.வேலுப்பிள்ளை செல்லத்துரை
யா/கோ/7823 திரு.சின்னத்துரை விநாயகமூர்த்தி
யா/கோ/7828 திரு.சின்னப்பு கந்தையா
யா/கோ/7832 திரு.வைரவன் வல்லி
யா/கோ/7835 திருமதி.சரஸ்வதி வைரமுத்து
யா/கோ/7859 திரு.வல்லிபுரம் பொன்னம்பலம்
யா/கோ/7889 திரு.சுந்தரம் நித்தியானந்தன்
யா/கோ/7935 திருமதி.இராசம்மா நவரத்தினம்
யா/கோ/7978 திரு.வயித்தி சீனியர்
யா/கோ/7980 திரு.ஞானப்பிரகாசம் திருச்செல்வம்
யா/கோ/7987 திரு.ஆறுமுகம் கணேசு
யா/கோ/8000 திருமதி.இலட்சுமி சின்னத்தம்பி
யா/கோ/8002 திருமதி.துரைமணி பொன்னையா
யா/கோ/8067 திருமதி.செல்வரத்தினம் ஆறுமுகம்
யா/கோ/8080 திருமதி.நாகேஸ்வரி கந்தையா
யா/கோ/8098 திரு.முத்து பொன்னுத்துரை
யா/கோ/8125 திரு.சீனியன் வைத்திலிங்கம்
யா/கோ/8158 திரு.வைத்தி இளையதம்பி
யா/கோ/8231 திரு.பழனி முருகேசு
யா/கோ/8261 திரு.தாமோதரம்பிள்ளை கந்தசாமி
யா/கோ/8297செல்வி.சரஸ்வதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
யா/கோ/8301 திருமதி.கனகம்மா முத்துராஜா
யா/கோ/8319 திருமதி.கமலாதேவி சிவசுப்பிரமணியம்
யா/கோ/8350 திருமதி.யோகம்மா கோவிந்தசாமி
யா/கோ/8396 திரு.மயில்வாகனம் பரமானந்தம்
யா/கோ/8416 திரு.சின்னத்துரை நாகேந்திரம்
யா/கோ/8453 திரு.இளையதம்பி கனகசபை
யா/கோ/8504 திரு.கணபதி மயிலு
யா/கோ/8542 திரு.கந்தர் பரமு
யா/கோ/8570 திருமதி.தங்கமுத்து கந்தசாமி
யா/கோ/8584 திருமதி.வள்ளிநாயகி இராசதுரை
யா/கோ/8613 திருமதி.சாந்தநாயகி இலங்கைநாயகம்
யா/கோ/8620 திரு.கதிர்காமு இராஜலிங்கம்
யா/கோ/8708 திரு.செல்லையா சிவஞானம்
யா/கோ/8713 திரு.பொமியான் ஆசீர்வாதம்
யா/கோ/8718 திரு.சீனியன் சிவமயம்
யா/கோ/8724 திரு.சுப்பர் சோமு
யா/கோ/8731 திருமதி.செல்வநாயகி இராசதுரை
யா/கோ/8775 திரு.கந்தையா மகாதேவா
யா/கோ/8789 திரு.கந்தையா இரத்தினம்
யா/கோ/8801 திரு.செல்லையா கனகலிங்கம்
யா/கோ/8807 திரு.சிவலை செல்லத்துரை
யா/கோ/8809 திரு.மார்க்கண்டு தம்பிராசா
யா/கோ/8830 திருமதி.சரஸ்வதி கந்தையா
யா/கோ/8833 திருமதி.பொன்னம்மா செல்லத்துரை
யா/கோ/8843 திரு.இராமலிங்கம் இரத்தினம்
யா/கோ/8844 திரு.தம்பிமுத்து தங்கராசா
யா/கோ/8848 திரு.இளையவர் இராசதுரை
யா/கோ/8866 திருமதி.இராசம்மா சின்னத்தம்பி
யா/கோ/8872 திரு.பொன்னர் நடேசு
யா/கோ/8884 திருமதி.சவுந்தரம் இராசரத்தினம்
யா/கோ/8898 திருமதி.பொன்னமா சேனாதிராசா
யா/கோ/8901 திரு.இளையவி பாலசிங்கம்
யா/கோ/8905 திரு.வைரமுத்து தவராசா
யா/கோ/8908 திரு.வைரமுத்து தங்கராசா
யா/கோ/8911 திரு.வேலுப்பிள்ளை கார்த்திகேசு
யா/கோ/8913 திருமதி.ஜெகதீஸ்வரி வீரசிங்கம்
யா/கோ/8977 திருமதி.யோகேஸ்வரி தில்லையம்பலம்
யா/கோ/9022 திருமதி.தவமணி தம்பிஐயா
யா/கோ/9029 திருமதி.மனோன்மணி இராசதுரை
யா/கோ/9044 திருமதி.கனகாம்பிகை தம்பு
யா/கோ/9045 திருமதி.பார்வதி மாணிக்கம்
யா/கோ/9071 திரு.பொன்னம்பலம் நல்லையா
யா/கோ/9085 திருமதி.மாரிமுத்து பழனிவேல்
யா/கோ/9106 திரு.மயில்வாகனம் இராஜேந்திரா
யா/கோ/9112 திருமதி.சரஸ்வதி இரத்தினம்
யா/கோ/9139 திருமதி.தங்கம்மா விசாகநாதன்
யா/கோ/9150 திருமதி.பரமேஸ்வரி ஆறுமுகம்
யா/கோ/9151 திரு.சின்னத்தம்பி அரியநாயகம்
யா/கோ/9211 திரு.கந்தையா வேலாயுதம்
யா/கோ/9224 திரு.கறுத்தான் செல்லத்துரை
யா/கோ/9276 திரு.பொனிப்பாஸ் அல்வின்
யா/கோ/9312 திருமதி.நாகபூசணி தம்பிராசா
யா/கோ/9337 திரு.சின்னவன் கனகன்
யா/கோ/9372 திரு.இராமலிங்கம் விவேகானந்தம்
யா/கோ/9374 திருமதி.தங்கலட்சுமி செல்வரட்ணம்
யா/கோ/9449 திருமதி.இராஜேஸ்வரி சரவணமுத்து
யா/கோ/9454 திரு.கதிரவேலு இரத்தினம்
யா/கோ/9479 திரு.கந்தையா அருளையா
யா/கோ/9553 திரு.வேலுப்பிள்ளை அருணாசலம்
யா/கோ/9567 திருமதி.வள்ளியம்மாள் இராசநாயகம்
யா/கோ/9583 திருமதி.றோசம்மா இராசதுரை
யா/கோ/9585 திரு.தம்பையா காராளசிங்கம்
யா/கோ/9590 திரு.தம்பிஐயா சாம்பசிவம்
யா/கோ/9655 திரு.தம்பிஐயா சிவஞானம்
யா/கோ/9678 திரு.பெரியான் பொன்னன்
யா/கோ/9812 திருமதி.பூமணி சுப்பையா
யா/கோ/9865 திருமதி.ஆச்சிமுத்து கனகசபை
யா/கோ/9867 திருமதி.இராசேஸ்வரி சிவசுப்பிரமணியம்
யா/கோ/9895 திரு.கந்தன் கிருஷ்ணன்
யா/கோ/9930 திரு.சங்கரப்பிள்ளை சண்முகநாதன்
யா/கோ/9932 திரு.சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்
யா/கோ/ 9940 திரு.பொன்னுத்துரை சின்னத்துரை
யா/கோ/9979 திருமதி.இராசமணி தம்பிப்பிள்ளை
யா/கோ/10017 திருமதி.ருக்மணி கணபதிப்பிள்ளை
யா/கோ/10057 திருமதி.தங்கமுத்து வல்லி
யா/கோ/10098 திரு.கணபதிப்பிள்ளை அரசரத்தினம்
யா/கோ/10127 திரு.கந்தையா துரைராஜா
யா/கோ/10239 திரு.வைரமுத்து பொன்னம்பலம்
யா/கோ/10269 திரு.சிதம்பரக்கவுண்டர் இலட்சுமணன்
யா/கோ/10287 திரு.சிதம்பரி வேலுப்பிள்ளை
யா/கோ/10341 திரு.வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்
யா/கோ/10356 திரு.துரையன் குணராசா
யா/கோ/10370 திரு.கதிரன் செல்லன்
யா/கோ/10374 திருமதி.துரைக்குஞ்சு சின்னையா
யா/கோ/10396 திரு.சரவணமுத்து குமாரசாமி
யா/கோ/10409 திரு.செல்லப்பா பரமசாமி
யா/கோ/10422 திரு.செல்லையா நல்லையா
யா/கோ/10427 திரு.சின்னத்தம்பி தம்பிஐயா

## மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

யா/மா/15 திரு.இராசலிங்கம சுந்தரலிங்கம்
யா/மா/48 திரு.தாமோதரம்பிள்ளை பொன்னம்பலம்
யா/மா/62 திரு.சின்ளத்தம்பி செல்வரெத்தினம்
யா/மா/65 திரு.இராமலிங்கம் சடாச்சரம்
யா/மா/74 திரு.குலசேகரம் தனபாலசிங்கம்
யா/மா/155 திரு.சிவகுமாரசிங்கம் சத்தியநாதன்
யா/மா/166 திரு.தர்மலிங்கம் தியாகராசா
யா/மா/184 திரு.செல்லையா கணபதிப்பிள்ளை
யா/மா/192 திரு.வேலன் கணேசு
யா/மா/203 திரு.கிருஷ்ணபிள்ளை நடராசா
யா/மா/226 திருமதி.செல்வராசாத்தி வல்லிபுரம்
யா/மா/308 திருமதி.இராசம்மா வல்லிபுரம்
யா/மா/333 திருமதி.செல்வராணி கையிலநாதன்
யா/மா/361 திரு.செல்லத்துரை பத்மநாதன்
யா/மா/ 445 திருமதி.புவனேஸ்வரி நடராஜா.
யா/மா/452 திருமதி:பத்மாவதி இரத்தினசிங்கம்.
யா/மா/461 திரு.கந்தையா இராசரத்தினம்.

(தொடரும்...)

# முக்கிய அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**
**சகல கோழிப்பண்ணை உரிமையாளர்களின் கவனத்திற்கும்**

எம்மால் நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும், இற்றைவரை எவரும் உரிய முறையில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவில்லை. தகுந்த முறையில் கழிவகற்றல்( ப்படாத பண்ணைகள் உட்பட சகல கோழிப்பண்ணை களையும் உடனடியாக மூடிவிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

தவறின் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் எமக்கு வழங்கப்பட்ட 1980ஆம் ஆண்டின் 1159/22ஆம் இலக்க 22.11.2000ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்..

*வலி. தெற்கு பிரதேசசபை,*
*சுன்னாகம்,*
*2005.10.21* (சி-13093)

**திருமதி.ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்.**

---

## தமிழீழ நிர்வாக சேவை- தமிழீழம்

# காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

1. காடுகள், பற்றைக்காடுகள் அழிப்பது முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.
2. நீண்ட காலம் பராமரிப்பின்றிபற்றைக் காடாக வளர்ந்துள்ள உறுதிப் படுத்தப்பட்ட காணிக்கான ஆவணமுள்ள உரிமையாளர் பற்றைக் காட்டினை வெட்டி காணியை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பின் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினரின் எழுத்து மூலமான முன்னனுமதி பெற்ற பின்பே பற்றைக்காட்டினை வெட்டுதல் வேண்டும்.
3. அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்பது தண்ட னைக்குரிய குற்றமாகும். அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்போர் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
4. காணிகள் அரசினால் வழங்கப்பட்டபோது எத்தேவைக்கென வழங்கப்பட்டதோ அத்தேவைக்கு மட்டுமே காணி பயன்படுத்தப்படல் வேண்டும். வழங்கப்பட்ட காணியை பிற தேவைக்கு பயன்படுத்த முனைவதும், விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் குறித்த காணி பிற தேவைக்கும் விற்பனைக்கும் உட்படுத் தப்படவேண்டிய அவசியம் ஏற்படின் அக்காணி சம்பந்தமாக மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை, காணிப்பகுதியுடன் நேரில் தொடர்புகொண்டு எழுத்து மூலமான முன் அனுமதி பெற்ற பின்பே காணியைப் பிற தேவைக்கு பயன்படுத்த முடியும்.
5. திட்டங்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணிகள் காணி உரிமை யாளர்களினால் நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்தமையினால், அக்காணிகளை அவரது உறவினர்கள், உறவினர் அல்லாதோர் ஆட்சிப்படுத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட காணிகளை ஆட்சிப் படுத்தி வைத்திருப்போர் அக்காணியினை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இப்படிப்பட்ட காணியினை யாராவது விற்பனை செய்திருப்பின் அக்காணி மீள சுவீகரிக்கப்படும். இதற்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது.
6. 5இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் யாராவது நீண்ட காலம்/ குறுகிய காலம் ஆட்சிப்படுத்தி வைத்திருப்பின் அக்காணி தொடர் பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையுடன் தாமத மின்றித் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
7. வெளிநாட்டில் வாழ்பவர்களின் காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணி தொடர்பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தாமதமின்றி தொடர்புகொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
8. குடியிருப்பதற்குக் காணி இல்லாத குடும்பங்கள் தமக்கு காணி எதுவும் இல்லை என்ற கிராம அலுவலர், அக் கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியோரின் உறுதிப்பாட்டுக் கடிதத்துடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தொடர்புகொண்டு குடியிருப்பிற் கான காணியை பெற்றுக்கொள்ள முடியும்.
9. இருந்த காணியை விற்றவர்கள், பிற மாவட்டத்தில், பிற கிராம அலுவலர் பிரிவில் காணி உள்ளவர்கள் நிரந்தரமான குடியிருப்புக் காணிக்கு விண்ணப்பிக்க முடியாது. நிரந்தர குடியிருப்புக்காணி பெற்றவர் அக் காணியை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய முடியாது. அப்படியான காணியை எவராவது விலைக்கு வாங்கு பவர்களாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**தமிழீழ நிர்வாக சேவை,**
**நடுவப்பணியகம்,**
**155, பாரதிபுரம்.**
**கிளிநொச்சி.**

(சி-13107)

---

# பணிநிலைக்கான வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 31.10.2005 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பணிநிலைகள்**

1) ஆளுகை அலுவலர்,
2) கணக்குப் பதிவாளர்.
3) களஞ்சியக்காப்பாளர்.
4) கணனித்தரவுப் பதியுநர்.
5) இயந்திர இயக்குநர்.
6) சிற்றூழியர்.

**கல்வித் தகைமைகள்**

**பணிநிலை-01-** க.பொ.த. (உயர்தர) தேர்வில் தேர்ச்சியடைந்து இருத்தல்வேண்டும்

**பணிநிலை-02-03** க.பொ.த. (உயர்தர) தேர்வில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**பணிநிலை-04-** க.பொ.த.சாதாரணத்தரத் தேர்வில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனம் ஒன்றில் கணனித் தேர்வில் தேறியிருத்தல்வேண்டும்.

**பணிநிலை-05-06** ஆண்டு 8இல் கல்வி கற்றிருப்பதுடன், பணிப்பட்டறிவும் இருத்தல் வேண்டும்.

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:-**

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.,

**நேர்காணல் நடைபெறும் நாள்.:** 04. 11. 2005 காலை 09. 00 மணி
**நேர்காணல் நடைபெறும் இடம்:** மனிதவள மேம்பாட்டுப் பகுதி,நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி.

**குறிப்பு:** 01) நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித்தகைமைச்சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வருகை தருக.

02) பணிநிலை வேண்டுகையில் பணிநிலைகளைக் குறிப்பிட்டு அனுப்புக..

**ஆளுகை**
**மனிதவள மேம்பாட்டுப்பகுதி**

(சி-13044)

---

# ஓராண்டு நினைவு கண்ணீரஞ்சலி

பிறப்பு
1970 - 07 - 19



இறப்பு
2004 - 10 - 25

## அமரர் யே.அன்ரோ கொலின்ஸ்

தாய்தந்தைக்கு தலை மகனாய்
பாசமுள்ள நான்கு உடன் பிறப்புக்களின் மூத்த சகோதரனாய்
உற்றார் உறவினர் நண்பர்களின் நற்பண்புடையவராய்
இனிய மொழிபேசி செல்லமாய் சிரித்து பழகி வந்தாய்
உன் சொந்த நாட்டிலும் வெளிநாட்டிலும்
ஏனோ காலன் உன்மீதும் எம்மீதும் பொறாமை
கொண்டு கவர்ந்தெடுத்தான் எம்மிடையே இருந்து
ஆண்டொன்று சென்றாலும் உன் நினைவு
எம்மை விட்டு நீங்காதையா எம்மகனே
சகோதரனே அண்ணாவே உன் உறவுகளும்
உன்னைதினம் நினைத்து அழுது புலம்பி துடிக்கின்றோம்..

குறிப்பு:- அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 25.10.2005 நாளை காலை 6.30 மணிக்கு நன்றிப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்று அன்னாரின் இல்லத்தில் மதிய உபசரணையில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

*சந்திரா யேசுதாசன்*
*08ஆம் வட்டாரம்,*
*மந்துவில்,*
*புதுக்குடியிருப்பு* (6615)

**அம்மா, அப்பா, சகோதரங்கள்,**
**மைத்துனர்கள்.**

# லெப். கேணல் சுட்டா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி

## –லெப். கேணல் நவம் அ. கூ. மைதானத்தில் சிறப்புற ஆரம்பம்



லெப். கேணல் நவம் அறிவுக் கூடத்தினரினால் லெப். கேணல் சுட்டா ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டி நேற்று சிறப்பாக ஆரம்பமாகின.

லெப். கேணல் நவம் அறிவுக்கூட மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடர் 15 ஓவர்களைக் கொண்டதாகும். இதில் நேற்று நான்கு போட்டிகள் நடைபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற போட்டி ஆரோபாணம் வி.கழகத்திற்கும் என்.ஈ.சி. வி.கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. இதில் என். ஈ.சி. வி.கழகம் ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஆரோபணம் 58, என்.ஈ.சி. 59/4.

அடுத்து இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் சோலை வி.கழகமும், நவம் அறிவுக் கூட கல்லூரி அணியும் மோதின. அதில் 14 ஓட்டங்களினால் நவம் அறிவுக் கூடக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. நவம் அறிவுக் கல்லூரி 95/5, சோலை 83/7.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டி நிதியம் கல்லூரி அணிக்கும் கடற்புலிகள் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் கடற்புலிகள் அணி எட்டு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது. நிதியம் கல்லூரி 38, கடற்புலிகள் 39/2.

நேற்று இறுதியாக நடைபெற்ற போட்டியில் இளம்தென்றல் வி.கழகமும், சாள்ஸ் அன்ரனி அணியும் மோதின. இதில் இளம்தென்றல் வி.கழகம் 58 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. இளம்தென்றல் 103/8, சாள்ஸ் அன்ரனி 44.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி, இறுதிப் [illegible]டிகள் இன்று நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



விசுவமடு வ. ச. கிரிக்கெட் போட்டி

# இளந்தாரகை, தோழர்கள் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு!

விசுவமடு வர்த்தக சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு இளந்தாரகை ஏ அணியும், தோழர்கள் ஏ அணியும் தெரிவாகியுள்ளன.


விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் மிகவும் பரபரப்பாக நடைபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தோழர்கள் ஏ அணியும் இளந்தாரகை பி வி. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தோழர்கள் ஏ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதற்கமைய முதலில் களமிறங்கிய இளந்தாரகை பி அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவதாஸ் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் திவ்வியதீபன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தோழர்கள் ஏ அணி அதன் முன்னணி வீரர்கள் விரைவில் விக்கெட்டை இழந்தபோதும் சுகிர்தனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஐந்து விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. துடுப்பாட்டத்தில் சுகிர்தன் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டி இளந்தாரகை ஏ அணிக்கும் கிருஸ்ணபாரதி அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இளந்தாரகை



ஏ அணி [illegible] ஆரம்பத்தில் அதன் நம்பிக்கை துடுப்பாட்ட வீரர்களை இழந்து ஒரு சரிவை எதிர்நோக்கிய நிலையில் யோகீசன் தனது சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அணியை ஸ்திர நிலைக்குக் கொண்டு சென்றார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யோகீசன் 24 ஓட்டங்களையும், கிருபா 13 ஓட்டங்களையும், சாந்தன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரபுராஜ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிருஸ்ண பாரதி அணி 13.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரொசான் பத்து ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மதன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், சுதா ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறும் என்பது தெரிந்ததே.

# பாக்., இந்தியாவை வென்றால் இங்கிலாந்து உலகில் சிறந்த அணியாகும்!

பாகிஸ்தானையும் இந்தியாவையும் வெல்லும் பட்சத்தில் உலகில் சிறந்த கிரிக்கெட் அணியாக இங்கிலாந்து விளங்கும் என அவ்வணியின் தேர்வாளர் தலைவர் டேவிட் கிரேவ்னி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவை வென்ற அவ்வணி வீரர்கள் தரவரிசையில் இரண்டாம் இடத்திலிருப்பதாகவும், அவர்கள் தற்போது பாகிஸ்தான் சுற்றுலாவுக்கு சென்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து 16 வருடங்களுக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி ஆஷஸ் கிண்ணத்தை வென்றதாகக் குறிப்பிட்டுள்ள அவர் நாசர் ஹுசைன் அணித் தலைவராக இருந்த போது பாகிஸ்தான் அணியை ஐந்து வருடங்களுக்கு முன் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி 1985ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய அணியை டெஸ்டில் வெற்றிகொள்ளவில்லை என்றார்.

# லெப். கேணல் சேகர் நினைவு நாளும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும்!





சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து ஓயாத அலைகள் - 4 நடவடிக்கையில் காயமடைந்து 23-10-2000 அன்று மருத்துவமனையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரன் லெப். கேணல் சேகர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வும் சேகர் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டப் போட்டியும் நேற்று இடம்பெற்றது.

கிளி /கோவிந்தன் கடைச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீர் நினைவாலயத்தில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளர் குமுதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

முதலில் பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைக்க தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் சிறப்புத் தளபதியும், வடபோர் முனை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான வீரமணியும் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரன் சேகரின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை சேகரின் சகோதரன் கண்ணன் ஏற்றிவைக்க, தொடர்ந்து பொது மாவீரர் படத்திற்கான ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தாக்குதல் தளபதி பிரதாபன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மலர் மாலை அணிவித்து மலர் வணக்க நிகழ்வும் அகவணக்கமும் இடம்பெற்றன. பின்னர் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமுதாப் நினைவுரையினை ஆற்றினார். தொடர்ந்து கவிதா நிகழ்வு இடம்பெற்றது. கவிதா நிகழ்வினைப் போராளிகளான ஜெயசீலன், கில்மன் ஆகியோர் வழங்கினர்.

## தென்முனை அணி சம்பியனானது



அதனைத் தொடர்ந்து சேகர் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி நடைபெற்றது. முன்னதாக படையணியின் வடமுனை, மத்தி, தென்முனை மற்றும் விசேட அணிகளுக்கிடையே போட்டி நடைபெற்று தென்முனை அணியும், மத்தி அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு இறுதியில் தென்முனை அணி வெற்றி பெற்று சேகர் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

அதன் பின்னர் பரிசளிப்பு நிகழ்வு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் விளையாட்டுப் பொறுப்பாளர் பாவலன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக வெற்றி பெற்ற தென்முனை அணிக்கான வெற்றிக் கிண்ணத்தினை வடபோர்முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் முகுந்தன் வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து வெற்றிபெற்ற அணிகளுக்கான பரிசில்களை மேனன் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் போராளிகள், தளபதிகள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# துலீப் கோப்பை போட்டியில் தென்னாபிரிக்க அணி

(ஜெகனஸ்பேர்க்)



அடுத்த ஆண்டு நடைபெறும் துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பங்கேற்கின்றது.

துலீப் கோப்பை போட்டி ஆண்டு தோறும் ஒக்ரோபர் மாதம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் இந்தியாவில் உள்ள நான்கு மண்டல அணிகள் கலந்து கொண்டு மோதி வருகின்றன.

இந்தப் போட்டியின் தரத்தை மேலும் உயர்த்தும் விதமாக வெளி நாட்டு முதல் தர அணிகளை அழைக்க இந்திய கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது.

தென்னாபிரிக்க அணியை துலீப் கோப்பை போட்டியில் கலந்து கொள்ளும்படி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு இந்திய சபை வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த அழைப்பு குறித்து தென்னாபிரிக்க சபை ஆலோசனை நடத்தியது. இதில் முதல் கட்டமாக அடுத்த ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தென்னாபிரிக்காவின் சூப்பர் ஸ்போர்ட்ஸ் அணி துலீப் கோப்பைப் போட்டியில் ஆட முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி ஜெரால்ட் மஜோலா தெரிவித்துள்ளார்.

# நாக்பூர் போட்டியில் ஜெயசூரிய பங்கேற்பார்




சிறிலங்கா கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான சனத் ஜெயசூரிய நேற்று முன்தினம் மும்பாய் கிரிக்கெட் சபைத் தலைவர் அணியுடனான பயிற்சிப் போட்டியின்போது வலது கையில் காயமேற்பட்டு இடைநடுவில் களத்தைவிட்டு சென்று ஓய்வுபெற்றார்.

அவ்வாறு ஓய்வில் சென்றபோதிலும் நாளை நாக்பூரில் நடைபெறும் இந்தியாவுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில் பங்கேற்கும் தகுதியுடன் இருப்பதாக சிறிலங்கா கிரிக்கெட் சபை முகாமையாளர் திசேரா கூறியுள்ளார். ஜெயசூரிய கடந்த ஒகஸ்டில் அதே இந்திய அணியுடன் நடைபெற்ற போட்டியொன்றின்போதும் தோள்பட்டை காயத்துக்குள்ளனார். அதைத் தவிர அண்மையில் நடைபெற்ற வோட்டர் போலோ பயிற்சிப் போட்டியின்போதும் காயத்துக்குள்ளானார்.




நேற்று முன்தினம் மும்பாய் அணியுடன் பங்குபற்றிய அணி அவ்வளவாக பலம் வாய்ந்த அணியில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், நாளைய போட்டியில் பலம் வாய்ந்த அணி பங்குகொள்ளும் எனத் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



சமூக மாற்றத்திற்கு முதற்படியாக சமூக விழிப்புணர்வு அவசியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 24.10.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## இனவிரோதிகள்!

வடக்கு கிழக்கில் தேர்தல்களின்போது பணியாற்றுவதற்கு அதிகாரிகளை தெற்கில் இருந்து – குறிப்பாகச் சிங்கள அவவலகர் களைக்கொண்டு வருதல்வேண்டும் என ஈ.பி.டி.பி இனவிரோதக் குழுவும், சிங்கள பேரினவாதச் சக்திகளில் சிலவும் கோரிக்கை விடுத்துள்ளன. இதற்குச் செவிமடுக்குமாப் போன்று தேர்தல் ஆணையகமும் சில தீர்மானங்களுக்கு வரலாம் போன்று தக வல்கள் வெளியாகியுள்ளன.

ஈ.பி.டி.பி.போன்ற இனவிரோத சக்திகளும் பௌத்த –சிங்கள இனவாத சக்திகளும் இவ்வாறு கோருவது ஒன்றும் ஆச்சரியமான தல்ல. ஈ.பி.டி.பி. போன்ற சக்திகள் என நாம் விழிப்பதன் அர்த்தத்தையும் இதில் இருந்து புரிந்து கொள்ளமுடியும். இவர்கள் தம்மக்கள் மீது நம்பிக்கைகொண்டவர்களாக இருந்திருப்பின் இத்தகைய கோரிக்கையை அவர்கள் விடுத்திருக்கவாய்ப்பில்லை. இவர்களின் தம்மீதான நம்பிக்கையீனமே தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையீனமாக அவர்களால் கொள்ளப்படுகின்றது.

இதேவேளை பௌத்த சிங்களப்பேரினவாதிகளோ வேறொரு கற்பனையில் உள்ளனர். தமிழ் மக்கள் சமாதானம் குறித்துப்பேசும் சக்திகளுக்கு சட்டதிட்டங்களையும் மீறி ஏதோ வாக்குகளை அள்ளிக்குவித்துவிடுவார்கள் என நம்புகின்றனர். அதாவது சமாதானம் பேசும் சிங்களத் தலைவர்கள் மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்து விடுவார்கள் என்றும், அத்தகைய சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு ஏதோ அள்ளிக்கொடுத்துவிடும் என்பது போன்றும் கற்பனை செய்கின்றனர்.

ஆனால், இவ்இனவாதிகளுக்கும் சரி, பௌத்த – சிங்கள பேரினவாத சக்திகளுக்கும் சரி, சிறிலங்கா தேர்தல் ஆணையகத் திற்கும் சரி, ஏன் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுபவர்களுக்கும் சரி தமிழ் மக்கள் தரப்பில் இருந்து கூறிக்கொள்ளவேண்டியவை சில உள்ளன.

முதலில் தமிழ் மக்களுக்கு இத்தேர்தலிலும் சரி, எத்தேர்தலிலும் சரி மோசடிகளில் ஈடுபட வேண்டிய தேவை இல்லை என்பது இதில் முதலாவதானதாகும்., ஏனெனில் தமிழ்மக்கள் தமது கொள்கை, தமது நிலைப்பாடு, தமது நோக்கம் என்பனவற்றில் தெளிவான பார்வையும், விளக்கமும் கொண்டவர்கள். அவர்கள் தேர்தல் வாக்குறுதிகள் சலுகைகள் என்பனவற்றிற்கு மயங்கி தேர்தல்களில் வாக்களித்துவிடப் போவதில்லை.

இதற்கு அடுத்ததாக சிறிலங்கா ஆட்சி அமைப்பிலோ, அன்றி ஆட்சியாளர்களிலோ தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டவர்களாகவும் இல்லை. அதாவது சிறிலங்கா அரசியல் அமைப்பினுள் தமது பிரச்சினைக்கு தீர்வு எதுவும் ஏற்படும் என்ற நம்பிக்கை கொண்டவர் களாக இல்லை. ஆகையினால், தேர்தலில் யாருக்காவது வாக்களிப்பதற்காக அவர்கள் மோசடிகளில் ஈடுபட வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை.

இவை ஒருபுறம் இருக்கையில் மற்றொரு புறத்தில் இவைகளில் ஊழல் மோசடிகள் அற்ற நிர்வாகமும், நடவடிக்கைகளும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலே உள்ளது என்பது இன்று சர்வதேச அமைப்புக்களினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று. இதனைச் சிறிலங்கா அரச தரப்பு நிர்வாகிகளே ஒப்புக்கொண்டும் உள்ளனர்.


குறிப்பாக அகில இலங்கை ரீதியில் நடைபெறும் பரீட்சைகள் கூட ஏனைய பிரதேசங்களில் நடைபெறுவதைவிட ஊழல் மோசடி கள் அற்றவையாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெறுவதுண்டு. கடந்த முறை நடைபெற்ற க.பொ.த.(உ.த) பரீட்சைகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் இது குறித்து தமது பாராட்டைக் கூடத் தெரிவித்திருந்தார்.

அதாவது, சிறிலங்காவின் சட்டம் ஒழுங்கோ அன்றி பாதுகாப்போ இன்றி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம் ஒழுங்கும், நீதியும் காக்கப்படும் என்பதற்கு இவையே எடுத்துக்காட்டாகக் கூடியவை. இதனைத்தவிர சிங்கள அரச அதிகாரிகளைவிட தமிழ் அரச அதிகாரிகள் சட்டம்–ஒழுங்கை கடைப்பிடிப்பதில் உறுதிமிக்கவர்களாகவும், நேர்மைமிக்கவர்களாகவுமே உள்ளனர் என்பதும் வெளிப்படையானது.

இதேவேளை இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிக மோசமான மோசடிகள் இடம்பெற்றதான தேர்தல் 1981 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றதான மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தேர்தலாகும். அத்தேர்தலின்போது, வாக்குக்கட்டுக்கள் கூடப் பிரிக்கப்படாமல் கட்டுக்கட்டாக அதாவது வாக்குச்சீட்டுகளின் “பின்கள்” கூடக் கழற்றப்படாமல் வாக்குகள் கட்டுக்கட்டாகப் போடப்பட்டன.

இவையாவும்தென்னிலங்கையில்இருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள அதிகாரிகளின் முன்னிலையில் சிறிலங்கா அரச படைகளின் பாதுகாப்பில் மேற்கொள்ளப்பட்டவை ஆகும்.

அதாவது வடக்கு கிழக்கில் தேர்தல் மோசடிகள் இடம்பெறாமல் பாதுகாப்பதற்கு சிங்கள அரச அலுவலகங்களோ அரச படைகளோ தேவையில்லை. தேர்தல் ஒழுங்கு விதிகள் அடிப்படையில் தமிழ் தேர்தல் அலுவலகர்களே சிறப்புற நடத்திமுடித்துவிடுவர். மாறாக, தேர்தலில் சிறிலங்காவில் ஆட்சியிலிருப்போருக்கு மோசடிகள் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்படும் பட்சத்திலேயே சிங்கள அலுவலகர்களும், ஆயுதப்படையினரும் தேவையாக இருக்கும். இதேவேளை, ஈ.பி.டி.பி போன்ற இனவிரோத சக்திகளுக்கு இது ஆதாயம் தேடும் ஒன்றாக இருக்கலாம். ஆனால், தேர்தலில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகளுக்கு இவை தன்மானப் பிரச்சினைகளைத் தோற்றிவிப்பவையாகி விடும்.




## முஸ்லிம் காங்கிரஸின் 67 நிபந்தனைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார்

### - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த 67 நிபந்தனை களை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதால் சிறி லங்கா சனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரித்தோம் என்று அக்கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளதாவது கடந்த ஆறுமாத காலமாக ரணில்விக்கிரமசிங்கவுடன் இதுதொடர்பிலான பேச்சுக்களை நடாத்தினோம். முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற வேட்பாளரைத்தான் ஆதரிப்பது என்று கட்சியின்மத்திய குழு முடிவு செய்திருந்தது. அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம் தனித்தரப்பு, ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப் பில் முஸ்லிம்களை உள்ளடக்குதல், தமிழர்களுடனான அதிகாரப்பகிர்வின்போது கிழக்கில் முஸ்லிம்களுக்கான தன்னாட்சி உள்ளிட்டவை ரணிலுக்கு முன்வைத்த நிபந்த னைகளில் முக்கியமானவை. எம்மைப்பொறுத்த வரையில் ரணில் விக்கிரமசிங்கவினால்த்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம் என அவர்மேலும் தெரிவித்தார்.

## மதம் தொடர்பான சட்டங்களுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் மதம் தொடர்பான சட்டங்களுக்கு அமெ ரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது. சிறிலங்காவில் அண்மை யில் தர்மவிஜய அறக்கட்டளை நடத்திய கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஜோனெல்ல மொராலெஸ் கூறியதாவது.

மதப்பிரச்சினைகளுக்கும் மதம் தொடர்பான விவகாரங்களுக்கும் சட்டத்தின்மூலம் தீர்வு காண முடி யாது. மத சுதந்திரம் தொடர்பிலான அமெரிக்காவின் கொள்கையும் அதுவல்ல. அமெரிக்காவின் மத சுதந்திர அமைச்சக மானது மத சுதந்திரம் தொடர்பான செயற்பாடு களை வெளிநாடுகளில் நடை முறைப்படுத்துவதில் பொறுபபேற் கிறது. பல்வேறு நாடுகளிலும் மத சுதந்திர நடவடிக்கைகள் தொடர்பாக ஆண்டு தோறும் ஆய்வறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

அமெரிக்காவின் சில நட்பு நாடுகள் மத சுதந்திரத்தை மீறுகிற நாடுகளின் பட்டியலில் இல்லை. சிறிலங்காவும் அத்தகைய பட்டி யலில் இல்லை. சீனா, வியட்னாம், பர்மா, சவுதி அரேபியா,ஈரான், எரித் திரியா ஆகிய நாடுகள் அமெரிக் காவின் பட்டியலில் இடம்பெற்றுள் ளன. மத சுதந்திரத்தை வலுப்படுத் தும் நோக்கத்தில்தான் புத்தமதம் செல்வாக்கு பெற்று இருக்கும் சிறி லங்காவுக்கு நாம் பயணம் மேற் கொண்டுள்ளோம். சிறிலங்காவில் மத மாற்றம் தொடர்பாக ஒரு சட்டம் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிந்து வருத்தப்பட்டோம். இது தொடர்பில் இரு சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட வுள்ளமை வருத்தத்திற்குரியது என்றார்.

## விமான நிலைய விபத்தில் மரணமானவருக்கு நட்ட ஈடு கோரும் இந்தோனேஷியா

(கொழும்பு)

சிறிலங்கா விமான நிலைய விபத்தில் இந்தோனேஷியப்பெண் இறந்ததையடுத்து சிறிலங்கா அரசாங்கத்திடமிருந்து இந்தோனே ஷியா நட்ட ஈட்டைக் கோரியுள்ளது.

சிறிலங்கா விமான நிலையத் தில் அண்மையில் ஏற்பட்ட விபத்தில் இந்தோனேஷியாவைச்சேர்ந்த முஸ்கானா திண்டி ஜெஜென் 37 வயது என்றஇரண்டுகுழந்தைகளின் தாயார் உயிரிழந்தார். டுபாயில் பணிக்குச் செல்ல அவர் கொழும்பிலிருந்து விமானம் மாறுவதற்காக இறங்கிய போது இந்த விபத்தில் பலியானார். இறந்த பெண்மணிக்கான நட்ட ஈட்டுத் தொகையாக பத்து இலட்சம் ரூபாவை இந்தோனேஷியத் தூதரகம் கோரியிருந்தது. அதைச் செலுத்த சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமான நிறுவனமும் ஒப்புக்கொண்டிருந்தது.

இதனிடையே ஊடகவியலாளரி டம் பேசிய இந்தோனேஷிய தூதர் நஸ்ருதீன் சிராஜ், இறந்தபெண்ணின் குடும்பத்திற்கான உரிய நட்ட ஈட்டுத் தொகையை பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார். இது குறித்து கருத்துத்தெரிவித்த சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமான சேவையின் தலைமை தகவல் தொடர்பு அதிகாரி சந்தான டி சில்வா, காப்பீட்டுத் தொகை விடயங் களை இறுதி செய்வதற்காக பொலிஸ் துறையின் விசாரணை அறிக்கைக்குக் காத்திருக்கின் றோம்.விபத்தில் இறந்த பெண் ணின் குடும்பத்திற்குரிய நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்றார்அவர்.

## ரணில்நாட்டின் சனாதிபதியானால் எஸ்.பி. பாராளுமன்றம் திரும்புவார்

(கொழும்பு)

சனாதிபதியாகதான் தேர்ந் தெடுக்கப்பட்டால் சிறையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எஸ்.பி.திசநாயக்க பாராளுமன்றத்துக்கு திரும்புவார் என்று ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசுகையில், இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார். இக் கூட்டத்தில் எஸ்.பி. திசநாயக்கவின் துணை வியார் தாமர திசநாயக்கவும் கலந்து கொண்டு உரையாற்றினார். 'எஸ்.பி. திசநாயக்கவை விடுதலை செய்வது தொடர்பாக முன்னர் சந்திரிகாவுடன் மிலிந்த மொறகொட உள்ளிட்டோர் சமரச முயற்சிகளை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனி நாடு அமைக்கும் சந்தர்ப்பத்தை தமிழர்களுக்கு சர்வதேசம் வழங்க வேண்டும்

## -சிங்கள கல்விச் சமூகம் வேண்டுகோள்

(கொழும்பு)

தேர்தலில் வென்று சனாதிபதியாக வருபவர் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருபவராக இருத்தல் வேண்டும் இல்லையெனில் இலங்கையிலிருந்து பிரிந்து தனி நாட்டினை அமைக்கும் சந்தர்ப்பத்தை சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும். என சிங்கள கல்விச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து பேராசிரியர் எஸ். வீரகொட கூறுகையில்; இலங்கையில் நீடித்துச் செல்லும் பிரச்சினையால் அனைத்துச் சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்மக்கள் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். இலங்கையை மரணங்கள மலிந்த பூமியாக தொடர்ந்தும் வைத்துக் கொண்டிருக்க முடியாது. இன்றைய நவீன காலத்தில் ஏமாற்றிவிட முடியாத ஒரு தலைவராக, தமிழ் மக்களின் தலைவராக வேலுப்பிள்ளை பிரபாகரன் இருக்கிறார். அவர்கள் நீண்ட காலமாக உரிமைகளைக் கேட்டு போராட்டம் நடத்துகிறார்கள். ஐக்கிய நாடுகள் விதிகளின் படி நீண்ட காலம் போராட்டம் நடத்தும் ஒரு சமூகம் பிரிந்து செல்வதற்கான உயர் தகுதியினைப் பெற்றுள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சிங்கள சமூகம் மக்களை அரவணைத்து உரிமைகளை வழங்கப் போகிறதா? அல்லது தமிழ் மக்கள் தாமாகவே உரிமைகளைப் பெற்றுக் கொள்ள நாம் வழி சமைக்கப் போகிறோமா என்பதை ஒவ்வொரு சிங்களவரும் சிந்திக்க வேண்டும். அதே போன்று தமிழ் மக்களுக்கு ஒரு பாரிய பொறுப்புள்ளது. முதன்மை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தும் நாம் ஏமாந்து விட்டோம் என கூறக் கூடாது. தமக்கு விடுதலையைப் பெற்று உரிமைகளை வழங்கக் கூடியவர்களுக்கே அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்றார்.

# யாழில் வாக்காளர் விபரங்கள் ஈ.பி.டி.பி யினரால் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள வாக்காளர்களின் விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈ.பி.டி.பியினர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். சிறிலங்கா பொலிஸ் மற்றும் இராணுவ உதவியுடன் கிராம சேவையாளர் அலுவலகங்களுக்குச் சென்று குடும்ப விபரங்களையும், இறந்தவர்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் விபரங்களையும் தரும்படியும் மிரட்டி வருகின்றனர்.

பொலிஸ்மற்றும் இராணுவத்துடன் இவர்கள் செல்வதனால் கிராம சேவை அலு வலகங்களில் நிற்கும் பொது மக்கள் தமது கடமைகளை நிறைவேற்றாமல் திரும்பிச் செல்லுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

தேர்தல் பரப்புரையில் எந்தவொரு பாதுகாப்புப் படையினரும் ஈடுபடக் கூடாது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ள போதி லும் ஈ.பி.டி.பியினருடன் இணைந்து செல்லும் சீருடையினர் பொது மக்களிடம் தேர்தல் சம்பந்தமாக கருத்துக்களை திணித்து வருகின்றனர்.

இதேநேரம் பொது மக்கள் கூடும் இடங்களில் பொலிஸ் மற்றும் இராணுவம் ஆயுதங்களுடன் நடமாடுவதன் மூலம் பொதுமக்கள் ஆபத்தை எதிர் நோக்குவதாகவும் பொது அமைப்புக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# அஞ்சல் மூல வாக்களிப்பில் அக்கறை காட்டாத அரச ஊழியர்கள்

சனாதிபதித் தேர்தலுக்கான அஞ்ல மூல வாக்களிப்பில் கலந்து கொள்வதில் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் அக்கறை காட்டவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு கிழக்கு அரச உத்தியோகத்தாகளில கணிசமானோா அஞசல மூலவாக்களிப்பிற்கான விண்ணபபங்களை அனுப்பவில்லை எனத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் சுமார் ஏழாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் தேர்தல் கடமைகளிலும் ஈடுபடவுள்ளனர். இவர்களில் சுமார் நாலாயிரத்து ஐநூறு பேர் வரையிலேயே அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளனர்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்ற போதிலும் சுமார் நானூறு பேர்வரையிலேயே அஞ்சல் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பித்துள்ளனர். இதே நிலையே அம்பாறை மாவட்டத்திலும் காணப்படுகிறது.

அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்தவர்களும் கூட தமது வாக்குகளை தேர்தலில் பயன்படுத்துவார்கள் என்பதும் சந்தேகமே. தமது வாக்குகள் பிழையான வழியில் பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காகவே தாம் அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் பல அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# சேதுவை ஆற்றில் மூழ்கி நான்கு மாணவர்கள் பலி

(கொழும்பு)

சேதுவை தண்டுகம ஆற்றில் மூழ்கி நான்கு பாடசாலை மாணவர்கள் உயிரிழந்தனர். இவர்களில் இருவரின் சடலங்கள் தற்போது மீட்கப் பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் எட்டுப்பேர் தண்டுகம ஆற்றில் படகொன்றில் செல்லும்போது அதன்மீது தென்னைமரம் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. கடற்படையினரும், மக்களும் ஏனைய இரு மாணவர்களின் சடலங்களை மீட்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# சனாதிபதித் தேர்தலில் வன்முறை நடைபெற்றால் பொலிசாருக்கு துப்பாக்கிச் சூடு நடத்த அதிகாரம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் வாக்களிப்பின் போது பாரியளவில் வன்முறைகள் நடைபெற்றால் அதிக பட்ச அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்ஜித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேவையான வழிகாட்டல்களை பொலிஸ் ஆணைக்குழு வழங்கியிருக்கின்றது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகளுக்கு ஆணைக்குழுவின் பாதுகாப்புக் கிடைக்கும்

இந்த வழிகாட்டல் அறிக்கையைத் தயாரித்தபோது தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைகளும், அதற்குப் பெறப்பட்டதாகவும், தேர்தல் பாதுகாப்புத் தொடர்பில் அடுத்த வாரம் மீண்டும் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்.தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளின் கடமைகளும், பொறுப்புக்களும்,என்னவென உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு ஆணைக்குழுவிடம் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளதாகவும், அதற்கமைய எதிர்வரும் தேர்தலின் போது பொலிசார் நடந்து கொள்ள வேண்டிய முறை குறித்து விசேட சுற்று நிருபமொன்றை ஏற்கனவே வெளியிட்டிருப்பதாகவும், அவர் கூறினார். ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை மீறிச் செயற்படும் பொலிசுருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் அவர்கள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சனாதிபதித்தேர்தலில் கணினி வாக்காளர் அட்டை

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் கணினியில் வடி வமைக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியில் இந்த முறை முதல் தடவையாக பரீட்சிக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதி வாக்காளர்களுக்கு இரண்டு பக்கங்களைக் கொண்ட தொலைபேசிக் கட்டணப்பட்டியலை ஒத்த வாக்காளர் அட்டைகள் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதுவரை வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கு அதிக செலவு ஏற்படுவதை அடுத்தே அவற்றை கடதாசி வடிவில் அச்சிட தீர்மானிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையக தரப்பு தெரிவித்துள்ளது.

இது சாத்தியமானால் தொடர்ந்து வரும் தேர்தல்களில் இந்த முறையை நடைமுறைப்படுத்த தேர்தல் ஆணையகம் தீர்மானித் துள்ளது.

இந்தப் புதிய முறைக்கு கட்சித் தலைவர்களின் அனுமதியும் கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த புதிய வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பு மேற்கு வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

# பிரச்சாரத்திற்காக பொதுச் சொத்துக்கள்; இதுவரை 82 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பொதுச் சொத்துக்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் 82 முறைப்பாடுகள் தேர்தல் ஆணையகத்திற்குக் கிடைத்துள்ளன.

17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்திற்கு அமைவாக இந்த விடயம் தொடர்பாக சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(32)

## சமையல்...

உலக சந்தையில் எரியுவாயு விலைகள் மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவை தாக்கிய சூறாவளிகள் காரணமாக பல எிவாயு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்புக்கு இதுவும் ஒரு காரணமெனக் கூறப்படுகிறது

## சந்திரிகா...

தெரிவித்தன

இலங்கை சுதந்திரக்கட்சியின் நீண்டகாலக்கொள்கைகளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கைகழுவி விட்டார் என சனாதிபதி மிகவும் விசனமடைந்திருக்கிறார் என்று செய்திகள் வெளியாகும் நிலையில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய...

அண்மையில் யாழ். சென்றிருந்த போது நான் கற்பனை செய்திருந்த யாழ்ப்பாணம் வேறு என்பதை உணர்ந்துகொண்டேன்.அது ஒரு மரண நகரமாக இருக்கும் என்று எண்ணினேன். ஆனால் எனது பயணத்தின் போது வியப்புக்குள்ளாகினேன். அசாதாரண சூழ்நிலைகளை அந்த மக்கள் எதிர் கொண்டிருக்கும் விதம் ஆச்சரியமளிக்கிறது.

ஆழிப்பேரலை நிவாரண நிதிக்காக நெதர்லாந்து அரசாங்கமானது 15 மில்லியன் யூரோ அளித்துள்ளது. அமைதிப் பேச்சுக்களில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயின் பங்களிப்பை சில ஊடகங்கள் விமர்சனம் செய்வது வருத்தத்திற்குரியது. நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் நோர்வே அனுசரணையாளர் பணியை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் அமைதி தொடர்ந்தால் பொருளாதார வளர்ச்சியும் படிப்படியாக உயரும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் பாரிய தடைகளை சிறிலங்கா அரசாங்கம் எதிர்கொண்டிருப்பதால் அதன் பணிகள் முழுமையடையாமல் உள்ளன. இப்பணிகள் நிறைவடைய ஒரு குறிப்பிட்ட காலமாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## துப்பாக்கிச்...

முகாமிற்கு முன்பாகவுள்ள வீடொன்றில் முன் பக்க மதில் துவாரம் ஊடாக மறைந்திருந்து ரி.- 56 ரக துப்பாக்கி மூலம் இனந்தெரியாத நபர்களினால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இராணுவச் சிப்பாய்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக படைத்தரப்பு கூறுகிறது.

## இலங்கையில்...

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டில் வெளியிட்ட 2005 ஆம் ஆண்டுக்கான உலக முதலீட்டு அறிக்கையின்படி ஆசிய பிராந்தியத்தில் நேரடியாக வெளிநாட்டு முதலீடுகளைக் குறைந்தளவு பெற்றுக் கொண்ட நாடு இலங்கை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு ஆசிய பிராந்தியத்தில் முதலீடு செய்யப்பட்ட 700 கோடி அமெரிக்க டொலர்களில் இலங்கை 10 இலட்சத்திற்கு 233 டொலர்களை மாத்திரமே தமது வெளிநாட்டு முதலீடாகப் பெற்றுக்கொண்டதாகவும் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சீரற்ற...

புலத்சிங்கள ஆகிய தாழ்ந்த பிரதேசங்களே நீரால் மூழ்கியுள்ளன.

பதுரெலிய ஹெடிஹெல்ல வீதி கலவான மத்துகம வீதி என்பன நீரில் மூழ்கியுள்ளதாக களுத்துறை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

குறித்த வீதிகளில் மூன்று அடி உயரத்திற்கு நீர் நிறைந்திருப்பதால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாலை நேரங்களில் அல்லது இரவு நேரங்களில் நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்யக் கூடுமென வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.